மலர்-4 இதழ்-95 ஆகஸ்ட் 1-15 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# சென்னை அரசு பொது மருத்துவமனையில்

# மருத்துவம் பார்த்த முருகன்

## பெண்களுக்குரிய பண்புகள்

# குடும்பம் சிறக்க வேதம் கூறும் வழிமுறை



ஒரு குடும்பம் நன்றாக அமைவதும், சீர் கெட்டுப் போவதும் பெண்கள் கையில்தான் உள்ளது. குடும்பம் சிறப்பாக அமைய வேத மந்திரங்களிலேயே பல வழிமுறைகள் கூறப் பட்டுள்ளது.

கார்யேஷு தாசி கரணேஷு மந்திரி
ரூபேஷு லக்ஷ்மீ க்ஷமயா தரித்ரீ
ஸ்நேஹ ச மாதா சயனே து வேச்யா
ஷட் கர்ம யுக்தோ குலதர்ம பத்நி

மேற்கண்ட வேத வார்த்தையில் குலப் பெண்கள் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று மிக தெளிவா சுலோகமாக கூறப்பட்டுள்ளது.

- ❖ மனைவியானவள் வீட்டுவேலைகளை செய்வதில் பணிப்பெண் போலவும்.
- ❖ கணவருடன் கார்ய ஆலோசனை செய்வ தில் ராஜாவிற்கு மந்திரி புத்திமதி கூறி உதவுவது போலவும்.
- ❖ அலங்காரம் செய்வதில் மஹாலக்ஷ்மீ போன்ற அழகாக உடைகள், அணிகலன்கள், வாசனை புஷ்ப்பங்களால் அலங்காரம் செய்துக் கொள்ளவேண்டும்.
- ❖ குடும்ப உறுப்பினர்களிடம் பூமா தேவியை போன்ற பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும்.
- ❖ அம்மா தனது பிள்ளையிடம் எப்படி நடந்து கொள்வாளோ அப்படியே நட்பாக கணவருடன் பழகி, கணவருடைய குணம் தெரிந்து நடந்துக் கொண்டும் வருபவளே உண்மையான மனைவி ஆகிறாள்.

# ராம நாமம்

ராமனைவிட ராம நாமத்திற்கு சக்தி அதிகம் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அதை நிருபிக்கும் வகையில் வாலிக்கு ஞானம் கிடைத்தது கூட ராம நாமத்தால்தான் என்று கூறப்படுகிறது.

தன் மார்பில் பாய்ந்த இராம பாணத்தைப் பிடுங்கிய வாலியின் கண்ணில் முதலில் தெரிந்தது இராம நாமமே தவிர இராமன் இல்லை.

இராம நாமம் கண்ட பிறகுதான், அதற்குரிய இராமன் நேரிலே வரக் கண்டான்.

இராம பாணம் வாலியின் உயிர் போகும்படியான வேதனையைத் தந்தது. என்றாலும் இராம நாமத்தைக் கண்டதால் வாலிக்கு ஞானம் உண்டாகியது.



# 12 ராசிகளுக்குரிய கோயில்கள்



12 ராசியினரும் எந்த கோயில்களுக்கு சென்று வழிபட்டால் நன்மைகள் பெறலாம் என்பதை எளிமையாக பார்ப்போம்.

1. மேஷம்...........ராமேஸ்வரம்,
2. ரிஷபம்...........திருப்பதி,
3. மிதுனம்.........பழனி,
4. கடகம் ...........ராமேஸ்வரம்,
5. சிம்மம் ...........ஸ்ரீவாஞ்சியம்,
6. கன்னி...........திருக்கழுக்குன்றம்,
7. துலாம் ...........திருத்தணி,
8. விருச்சிகம் .....காஞ்சிபுரம்,
9. தனுசு ...........மயிலாடுதுறை,
10. மகரம் ...........சிதம்பரம்,
11. கும்பம் ...........தேவிப்பட்டிணம்,
12. மீனம்.............வைத்தீஸ்வரன் கோவில்.

# வருடத்திற்கு இரண்டு நாள் மடிசார் கட்டும் அம்மன்

திருவானைக்கா கோவிலில் உள்ள அம்மன் சன்னதியில் வருடத்தின் அனைத்து நாட்களும் புடவையுடன் காட்சிதரும் அம்மன் வருடத்தில் ஒரு நாள் மட்டும் மூலவர் அன்னை அகிலாண்டேஸ்வரி மடிசார் சாற்றி தரிசனம்.

பின்னர் ஏத்திஇறக்கல் என்னும் ஆரோகண அவரோகண பூஜை கோபூஜை, கன்யா பூஜை நடைபெறும்.

அதே நாள் மூலவருக்கு ஆன பின்னர் உத்சவருக்கும் மடிசார் சாற்ற பெற்று ஏத்தி இறக்குதல் வைபவம் நடைபெறும்.




உத்சவருக்கு வருடத்தில் இரண்டு நாட்கள் மடிசார் சேவை நடைபெறும் மார்கழி திருவாதிரை முதல் நாள் மற்றும் ஆடிபூர நாளன்றும். இந்த சிறப்பு தரிசனத்திற்கு பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.






# பல நோய்களை தீர்க்கும் எளிய முறை

நம் முன்னோர்கள் பயன்படுத் திய பல்வேறு இயற்கை மருத்துவமுறைகளில் ஒருசில மருத்துவமுறை மிக எளிதாக இருக்கும், ஆனால் பலன் மிகப் பெரியதாக இருக்கும். அந்தவகையில் கால் கட்டை விரல், உச்சந்தலையில் எண்ணை தடவி சிகிச்சை அளிக்கும் ஒருமுறைமிகவும் பலன் உள்ள முறையாகும். இந்த வழிமுறையை கடைபிடித்தால் பல்வேறு நோய்களுக்கு தீர்வு கிடைக்கும்.

நல்லெண்ணை, விளக்கெண்ணை, வேப்பெண்ணை, தேங்காய்எண்ணை, புங்கன் எண்ணை, கடுகு எண்ணை கலவையை கற்பூரம், நீல கிரி தைலம் சேர்த்து, காய்ச்சிய பிறகு, கால் கட்டை விரலில் தடவி, கட்டை விரல் இடுக்கில் எண்ணை பரவ விட வேண்டும்.

இவ்வாறு செய்து வந்தால்உடலில் ஏற்படும் எரிச்சல்கள் ஒருசில அரிப்புகள் தானாகவே மறைந்துவிடும், குறிப்பாக சிறுநீர் கழிக்கும்போது ஏற்படும் எரிச்சலுக்கு இது மிகப்பெரிய மருந்தாக பயன் படுத்தியுள்ளனர் நமது முன்னோர்கள்.

மேற்படி எண்ணை கலவையினை உச்சந்தலை, இரண்டு கால் கட்டை விரல் நகங்களின் மேலும், நக இடுக்கிலும் தடவி விட்டு வேப்பிலை அடிப்பது போல் மஞ்சள் துண்டு அல்லது வேப்பிலையால் வருடி வந்தால் பல்வேறு நோய்களையும் நீக் கலாம்.

இந்த முறை நமது சித்த மருத்துவத்தில் உள்ளது. பாட்டி வைத்திய முறையாகவும் பயன்படுத்தி உள்ளனர். தற்போது இந்த வழிமுறைகளை ஒருசில சித்த வைத்தியசாலைகளில் கடைபிடித்து கொடிய கேன்சர் நோய்களுக்கு கூட சிகிச்சையளித்து வருகின்றனர். உடலில் உள்ள பல்வேறு நோய்களுக்கு இந்த எளிய சிகிச்சைமுறை பயன் அளிப்பதாக உள்ளது.

கிராமத்து பூசாரிகள் இந்த சிகிச்சை முறையை பயன்படுத்தும்போது, காளி மந்திரம், போன்ற சக்தி வாய்ந்த மந்திரங்களை கூறி பல நோய்களை தீர்த்துள்ளதாக இன்றும் கிராமத்து பெரியவர்கள் கூறுகின்றனர்.

# பழனிக்கு வருவதற்கு முன்பு ஹரியானாவில் தங்கிய முருகன்

## கோவிலுக்கு பெண்கள் வரலாம்

# தரிசனம் கிடையாது










இந்தியாவில் ஒருசில கோவில்கள் ஒருசில வழிமுறைகளை பல நூற்றாண்டுகளாக கடை பிடித்து வருகிறது. அந்த வகையில் பெண்கள் நுழைய முடியாத கோவில், ஆண்கள் நுழைய முடியாத கோவில் என்று ஒருசில கோவில்களை நமது முன்னோர்கள் வரையறுத்துள்ளனர்.

சபரிமலையில் பெண்களும், பகவதி கோவில் பொங்கல் வைபத்தின் போது ஆண் களும் நுழைய அனுமதி கிடையாது.

இந்த வகையில் வட இந்தியாவில் உள்ள முருகன் கோவிலில் பெண்கள் நுழையக்கூடாது என்ற ஐதீகம் உள்ளது. இதனால் இந்த முரு கன் கோயிலுக்கு பெண்கள் யாரும் சென்று வழிபடுவது கிடையாது.

விநாயகருக்கும் முருகனுக்கும் ஞானப் பழத்தை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட போட்டி யில் கோபமடைந்த முருகன் தனது ஆடம்பர உடைகளை துறந்து கோவணத்துடன் ஆண்டி கோலத்தில், தாய் தந்தையரை விட்டு பிரிந்து பழனியில் வந்து கோவில் கொண்டதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

இந்த பிரிவின்போது, கைலாயத்திலிருந்து தென்இந்தியா வரும் வழியில் ஹரியானா மாநிலத்தில் பெஹோவா என்ற இடத்தில், துறவு கோலத்தில் தங்கியதாகவும், முருகனின் ஆடையற்ற ஆண்டிக்கோலத்தைப் பெண்கள்



பார்க்க கூடாது என்பதால் இத்திருக்கோவிலில் பெண்களுக்கு அனுமதி அளிக்கப்படுவதில்லை என்றும் கூறப்படுகிறது.

மேலும் இந்த ஆண்டிக் கோலத்தை பார்க்கும் பெண்களின் ஏழு பிறவிகளில் கணவனுடன் பிணக்கு ஏற்படும் என்று, காலப் போக்கில் செவிவழியாகப் பல்வேறு கதைகள் கூறப்படுவதாலும், இந்த கோவிலுக்கு வரும் பெண்கள் கார்த்திகேயன் சன்னதியை மட்டும் புறக்கணித்துவிடுகின்றனர்.

முருகனுக்கு பிரதானமான கோவிலாக இருந்தாலும், பெண்கள் வரக்கூடாது என்று பல்வேறு மொழிகளில் அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டிருந்தாலும், கோவில் நிர்வாகம் பெண்களுக்கு தடை விதிப்பதில்லை, பெண்கள் கோவிலுக்கு வந்தாலும் கார்த்தி கேயன் சன்னதியை தவிர்த்து மற்ற பரிகார தெய்வங்களை வணங்குகின்றனர், கார்த்திகேயன் சன்னதிக்கு வெளிப்புறமாக, கார்த்திகேயன் சன்னதி சுவற்றைப் பார்த்து வழிபட்டு செல்கின்றனர்.

பழனிக்கு வரும்வரை கோபத்தின் உச்சத்தில் முருகன் இருந்ததால் உடல் கோர மாகவும், மிகுந்த சூடாகவும் முருகனின் திரு மேனி இருந்ததால், முருகனை குளிர்விக்கும் வகையில் இத்திருத்தலத்தில் கடுகு எண்ணை அபிஷேகம் நடைபெறுகிறது.

இத்திருக்கோயில் 5ம்நூற்றாண்டுக்குமுன்பே கட்டப்பட்டுள்ளது, மகாபாரதத்தில் நடைபெற்ற குருஷேத்திரப் போரில் உயிரிழந்த வீரர்கள், உறவினர்களின் ஆன்மா சாந்தியடைய பாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிரர் இத்திருக்கோவிலுக்கு வந்து வழிபட்டதாகவும், யுதிஷ்டிரர் ஏற்றிவைத்த இரண்டு விளக்குகள் இன்றும் சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

ராமேஸ்வரம், காசி போன்ற திருத்தலங்களில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதைப் போன்று, இத்தலத்து கார்த்திகேயனுக்கு விளக் கேற்றி முன்னோருக்கு மோட்சம் கொடுக்கும் ஐதிகம் கடைபிடிக்கப்பட்டுவருகிறது, கடுகு எண்ணெயில் முருகனுக்கு அபிஷேகம் செய்து விளக்கேற்றிவைத்தால் பித்ரு சம்பந்தமான தோஷங்கள் தீருவதாக கூறப்படுகிறது.


ஆன்மிகமலர் மெயில் புக்

# சென்னை அரசு பொது மருத்துவமனையில் பாம்பன் சுவாமிகளுக்கு மருத்துவம் பார்த்த முருகன்

1923–வது வருடம், சென்னையில் ஒரு சாலையில் பாம்பன் சுவாமிகள் நடந்து செல்லும் போது, எதிர்பாராதவிதமாக ஒரு குதிரை வண்டியின் சக்கரங்கள் பாம்பன் சுவாமிகளின் கால்கள் மீது மோதியது.

எதிர்பாராத இந்த விபத்தால் பாம்பன் சுவாமி களின் கால் எலும்பில் முறிவு ஏற்பட்டு வலியால் அவதிப்பட்டார்.

எந்நேரமும் முருகனை நினைத்து உருகும் அடியவரான பாம்பன் சுவாமிகள் நடப்பதற்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டதால், அப்போது மிகப் பெரிய மருத்துவமனையாக இருந்த சென்னை அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அப்போது அங்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டு பார்த்தபோது கால் எலும்பு தனியாக ஒருபக்கம் முறிந்து காணப்பட்டது.

பாம்பன் சுவாமிகளுக்கு 73 வயது ஆனதால் இனி இவரோட எலும்பு கூடுறது ரொம்ப சிரமம் என்று மருத்துவர்கள் யோசித்தனர். மேலும் பாம்பன் சுவாமிகள் உப்பு போடாத பச்சரிசி பச்சைப்பயறு பொங்கல் மட்டுமே சாப் பிட்டு வந்தால், அவரது உடல் பலகீனமாக இருப்ப தாகவும் மருத்துவர்கள் கவலை தெரிவித்தனர்.

மருத்துவர்கள் முழுவதுமாக கைவிட்ட நிலையில் பாம்பன் சுவாமிகள் முருகனிடம் மனப்பூர்வமாக வேண்ட ஆரம்பித்தார்.

"மக்கள் நோய் நொடி இல்லாமல் வாழ வேண்டும் என்பதால் சண்முக கவசம் பாடி னேனே அப்பா. மக்களும் அதைப் படிக்கிறார்களே? ஆனால் அதைப் பாடியவனுக்கே நோய் என்றால் அடியவர்கள் என்ன நினைப்பார்கள்? மக்கள் உன் அருளைப் பற்றி இகழ்ந்து பேசக்கூடும் என்பதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை ஐயனே!, இந்த எலும்பு முறிவின்







பாம்பன் சுவாமிகளின் கால் எலும்பு முறிந்த எக்ஸ்ரே புகைப்படம் 27.12.1923



பாம்பன் சுவாமிகளின் கால் எலும்புகள் ஒன்றுகூடியத் தோற்றம் 06.01.1924

வலி என் முன்வினையால் வந்ததென்றால் அதை நான் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்?" என்று மனதார முருகனிடம் புலம்பியவாறே சண்முக கவசத்தை மறுபடி மறுபடி சொல்லிக் கொண்டிருந்தார் பாம்பன் சுவாமிகள்.

தொடர்ந்து ஆறு நாட்கள் முருகன் மீது மனப்பூர்வமாக நம்பிக்கையுடன் சண்முக கவசத்தை பாடிக்கொண்டே இருந்தார்.

ஆறாவது நாள் அவர் கனவுல சேவல், மயி லோட காட்சியளிக்கிறார் குழந்தைவேலன். பாம் பன் சுவாமிகளின் காலை வருடிவிட்டதைப் போன்று ஒரு உணர்வு ஏற்பட்டது.

மறுநாள் காலில் எந்தவித வலியும் தெரிய வில்லை, யாருடைய உதவியும் இன்றி அவராகவே எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்டார் பாம்பன் சுவாமிகள்.

இதைப் பார்த்த மருத்துவர்களுக்கு மிகுந்த அதிர்ச்சி கலந்த ஆச்சரியம் ஏற்பட்டது. இது எப்படி சாத்தியம் என்று மருத்துவர்கள் கலந்து ஆலோசனை செய்து, மீண்டும் பாம்பன் சுவாமிகளுக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது.

X ray முடிவைப் பார்த்த மருத் துவர்ளுக்கு மிகப்பெரிய ஆச்சரியம்.

உடைந்திருந்த அவரின் எலும்பு கள் எந்தவித மருத்துவ உதவியின்றி எலும்புகள் கூடி இருந்தது. மருத்துவர்கள் பாம்பன் சுவாமியை வணங்கினர், முருகனின் லீலையை கண்ணார கண்ட திருப்தி அடைந் தனர்.

சென்னை அரசு பொது மருத்துவ மனையில் "மன்ரோ வார்டில்" தான் பாம்பன் சுவாமிகள் தங்கி இருந்தபோது இந்த அதிசயம் நிகழ்ந்தது.

இன்றும் சென்னை அரசு பொது மருத்துவ மனையில் "மன்ரோ வார்டில்" பாம்பன் சுவாமிகளின் திருவுருவப்படம் மாட்டப்பட்டு நோயாளிகளால் வழிபடப்படுகிறார். பாம்பன் சுவாமிகளின் திருவுருவப் படத்தையும், அதன் கீழ் மேற்கண்ட அற்புத நிகழ்ச்சிக் குறிப்பையும் சென்னை அரசாங்கப் பொது மருத்துவமனையில் 11ஆவது வார்டில் (பழைய மன்றோ வார்டு) இன்றும் காணலாம்.

## ஆன்மிக மலர்கள்



- நரசிம்மரின் வலது கண்ணில் சூரியனும், இடது கண்ணில் சந்திரனும், இடையில் புருவ மத்தியில் அக்னியும் உள்ளனர்.
- நரசிம்மன் என்றால் ஒளிப்பிழம்பு என்று அர்த்தம்.
- நரசிம்மனின் தேஜஸ் காயத்ரி மந்திரத்துக்குள்ளே இருப்பதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.
- நரசிம்ம அவதாரம் பற்றி ஜெர்மன் அறிஞர் மாக்ஸ்முல்லர் கூறுகையில், `An Electric Phenomenon' என்று கூறியுள்ளார்.
- இரண்யகசிபுவை வதம் செய்த போது எழுந்த நரசிம்மரின் சிம்ம கர்ஜனை 7 உலகங்களையும் கடந்து சென்றதாக குறிப் புகள் உள்ளது.

# ப்ரத்யும்னன்

கிருஷ்ணருக்கும் ருக்மிணி தேவிக்கும் மன்மதனின் அம்சமாக பிறந்தவன் ப்ரத்யும்னன். கிருஷ்ணரின் ஜேஷ்ட குமாரன். காமனின் அம்சம் என்பதனாலோ அல்லது கிருஷ்ணரின் வீர்யம் என்பதனாலோ உலகையே வசீகரிக்கும் பேரழகுடன் பிறந்தான்.

'ப்ரத்யும்னன்' என்றால் உலகத்தைப் படைப்பவர் என்று பொருள்

கிருஷ்ணரின் மானஸிக புத்ரனாக அவருடைய மனஸிலிருந்தே இவன் தோன்றியதால் இவனுக்கு மனஸிஜன் என்ற பெயருமுண்டு. தோற்றத்தில் அச்சு அசலாக ஸ்ரீ கிருஷ்ணரை போலவே இருந்தான்.

விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் 294 ஆவது பெயர் ‘காமஹா’ என்பது ப்ரத்யும்னனை குறிக்கும்

மஹாவிஷ்ணுவுக்கு ஐந்து நிலைகள் உண்டு.

- ❖ பரம்
- ❖ வியூஹம்
- ❖ விபவம்
- ❖ அந்தர்யாமி
- ❖ அர்ச்சம்

இரண்டாவது நிலை வியூஹம். பகவானுக்கு நான்கு உருவங்கள் உண்டு. வாசுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்ற பெயர்களுடன் இவர்கள் முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு மற்றும் வடக்கு திசைகளை நோக்கி உள்ளனர்.

வியூஹ வாசுதேவனிடமிருந்து அறிவு, பலம் என்ற இரண்டு குணங்களைப் பெற்று சங்கர்ஷணர் விளங்குகிறார். அறிவைக்கொண்டு அவர் சாஸ்திரங்களை உருவாக்குகிறார். பலத்தைக்கொண்டு பிரளய காலத்தில் உலகின் அழிவுக்கு வழி வகுக்கிறார்.

சங்கர்ஷணரிடமிருந்து ப்ரத்யும்னரும், ப்ரத்யும்னரிடமிருந்து அநிருத்தரும் உருவாகிறார்கள். ப்ரத்யும்னர் வீரம், வீரியம் (ஆற்றல்) என்ற இரு குணங்களைக்கொண்டு எல்லா உலகங்களையும் உருவாக்கி, அங்கே தர்மம் நிலைபெறச் செய்கிறார்.

## ருக்மிணி கிருஷ்ணர் கல்யாணம்

விதர்ப்ப தேசத்தை பீஷ்மகன் என்பவன் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு ருக்மி என்னும் மகனும், ருக்மிணி என்னும் மகளும் இருந்தனர்.

அழகில் சிறந்த ருக்மிணியும், கிருஷ்ணரும் காதல் கொண்டனர். ருக்மிணி தன் காதலை தன் தந்தை பீஷ்மகனிடம் தெரியப்படுத்தினாள்.

ஆனால், ருக்மிணியின் சகோதரன் ருக்மி, இந்தக் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தான். தன் தங்கையை, தன்னுடைய உற்ற தோழனான சிசுபாலன் என்பவனுக்கு மணம் முடித்து வைக்கும்படி தந்தையிடம் வற்புறுத்தி சம்மதமும் வாங்கி விட்டான். இந்த சிசுபாலன் வேறு யாருமல்ல சனகாதி முனிவர்களால் சாபம் பெற்று பூமியில் அவதரித்த விஷ்ணுவின் த்வார பாலகர்களில் ஒருவன். கிருஷ்ணரின் அத்தை மகன்.






எல்லா நாட்டுக்கும் மணஓலை அனுப்பப்பட்டது. சிசுபாலனின் நண்பர்களான ஜராசந்தன், பௌண்டரகன் என்று பலரும் அழைப்பிதழை பெற்றனர். அவர்கள், திருமண வைபவத்தைக் காண விதர்ப்பதேசம் வந்தனர்.

விருப்பமில்லாத திருமணத்தை தடுத்து நிறுத்த, ருக்மிணி கிருஷ்ணருக்கு ஒரு பிராமணர் மூலம் கடிதம் கொடுத்து அனுப்பினாள். இந்த பிராமணர் இம்மகத்தான சேவைக்காக ஸ்ரீ ஸ்ரீ வாதிராஜ தீர்த்தராக அவதாரம் புரிந்தார். திருமணத்தை தடுத்து நிறுத்தும் பொருட்டு கிருஷ்ணரும், பலராமன் மற்றும் யாதவர்கள் புடைசூழ விதர்ப்பதேசம் புறப்பட்டு வந்தார்கள். திருமணம் நடக்கும் முன்பு, கிருஷ்ணர் மணப்பெண்ணான ருக்மிணியை தூக்கிக் கொண்டு துவாரகைக்கு தேரில் கிளம்பினார். ருக்மிக்கு தகவல் தெரிந்தது. அவன் கிருஷ்ணரைக் கொல்வேன் என்று சபதம் செய்து, அவரைத் துரத்தினான். இருவருக்கும் கடும் போர் நடந்தது. ருக்மியை கிருஷ்ணர் வீழ்த்தினார். பின்னர், ருக்மிணியோடு துவாரகை சென்றடைந்தார். ருக்மிணி கிருஷ்ணர் கல்யாணம் விமரிசையாக நடந்தது.



எஸ்.ரகுராமன்

## ப்ரத்யும்னன் ஜனனம்

சிறிது காலத்தில், மன்மதனின் அம்சத்தில் ஒரு மகனைப் பெற்றெடுத்தாள் ருக்மிணி. அவனுக்கு ப்ரத்யும்னன் என்று பெயரிட்டனர். பகவான் வாசுதேவருடைய அம்சமான காமதேவன் முன்பு சிவ பெருமானின் கோபத்தால் எரிந்து சாம்பலானார். பிறகு அவர் ருக்மிணியின் கர்பத்தில் மீண்டும் பிறவியெடுத்தார். ப்ரதியும்னரை எதிரி என்றெண்ணிய சம்பரன் என்ற அசுரன், பிறந்த பத்து நாட்களுக்குள் அக்குழந்தையை அபகரித்துச் சென்று சமுத்திரத்தில் எறிந்துவிட்டு நாடு திரும்பினான்.

ஒரு சக்திவாய்ந்த மீன் ப்ரதியும்னரை விழுங்கியது. அந்த மீனைச் செம்படவர்கள் பிடித்து சம்பரனுக்கே காணிக்கையாகக் கொடுத்தனர். அவனுடைய சமையற்காரர்கள் அந்த மீனை வெட்டியதும் அதன் வயிற்றில் ஒரு குழந்தையைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். பின்னர் அக்குழந்தையைக் வேலைக்காரியான மாயாவதியிடம் சமையற்காரர்கள் கொடுத்தனர்.

அச்சமயத்தில் நாரத முனிவர் தோன்றி குழந்தை யாரென்பதை அவளிடம் கூறினார். மாயாவதி உண்மையில் காமதேவனின் மனைவியான ரதிதேவியாவாள். தன் கணவர் புதியதொரு உடலில் பிறவியெடுப்பதற்காகக் காத்திருந்த சமயத்தில், அவள் சம்பரனின் வீட்டில் சமையல்காரியாக பணியாற்றி வந்தாள். இப்பொழுது குழந்தை யாரென்பதை அறிந்த அவள், குழந்தையிடம் மிகவும் பாசம் கொள்ளத் துவங்கினாள்.

## சம்பராசுன் வதம்

ஒரு சமயம் ப்ரத்யும்னனை அணுகிய ரதிதேவி, காதல் மனோபாவத்தோடு விளையாட்டாக தன் புருவங்களை அசைத்தாள். அவளைத்தன் தாயாக பாவித்த ப்ரதியும்னர், அவள் தாய்க்குரிய மனோபாவத்தை விட்டு ஒரு காதலியைப்போல் நடந்து கொள்வது முறையன்று என்று கூறி னார். பிறகு தாங்களிருவரும் யாரென்பதை ப்ரதியும்னரிடம் கூறிய ரதி, சம்பரனைக் கொன்றுவிடும்படி அறிவுரை கூறினாள். பிறகு அவருக்கு உதவும் வகையில் மகாமாயை என்ற மாயமந்திரத்தை அவருக்கு உபதேசித்தாள். ப்ரதியும்னரும் சம்பரனிடன் சென்று, பல அவதூறுகளால் அவனுக்குக் கோபமூட்டி, போருக்கழைத்தார். இதனால் கோபாவேஷமடைந்த சம்பரன் , தன் கதாயுதத்தை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான். அந்த





www.aanmeegamalar.com

அசுரன் பிரதியும்னருக்கு எதிராகப் பல வசிய சக்திகளைப் பிரயோகிக்க முயன்றான். ஆனால் ப்ரதியும்னர் அவற்றையெல்லாம் மகாமாயை மந்திரங்களால் தடுத்து, சம்பரனைத் தமது வாளால் சிரத்சேதம் செய்தார். அப்பொழுது ரதிதேவி ஆகாய மார்க்கமாக ப்ரத்யும்னனை துவாரகைக்கு அழைத்துச் சென்றாள்.

## ப்ரத்யும்னன் துவாரகையில் பெற்றோரை சந்தித்தல்

ருக்மிணி தேவி ப்ரதியும்னரைக் கண்டபொழுது, தாய்ப்பாசம் மேலோங்கி, அவளது ஸ்தனங்களிலிருந்து பால் பெருகியோடத் துவங்கியது. ப்ரதியும்னர் கிருஷ்ணரைப் போலவே காணப்படுவதைக் கவனித்த அவள், அவர் யாரென்பதை அறிய ஆவல் கொண்டாள். தன் மகன்களுள் ஒருவன் பிரசவ விடுதியிலிருந்து கடத்தப்பட்டதை அவள் நினைவு கூர்ந்தாள். "அவன் உயிருடன் இருந்திருந்தால், தன்முன் நிற்கும் இந்த ப்ரதியும்னனுக்கு ஒத்த வயதினனாக இருப்பான்." என்று அவள் எண்ணினாள். ருக்மிணி இத்தகைய சிந்தனையில் ஆழ்ந்திருந்த பொழுது பகவான் கிருஷ்ணன் தேவகியுடனும், வசு தேவருடனும் அங்கு வந்தார் பகவான் நிலைமையை நன்கு புரிந்து கொண்ட போதிலும் மௌனமாகவே இருந்தார். பி ற கு நாரதமுனி அவ்விடம் வந்து அனைத்தையும் விளக்கினார். விவரமறிந்து ஆச்சரியப்பட்ட அனைவரும் பேரானந்தத் துடன் ப்ரதியும் னரை தழுவிக் கொண்டனர்.



ஸ்ரீமத் பாகவதத்தில் ப்ரத் யும்னன் மற்றும் அவனின் மைந்தன் அநிருத்தன் சரிதம் இடம் பெறுகிறது. இவ் விரண்டு சரிதம் படிப்பதும் கேட்பதும் மிகவும் புண் ணியம்.

### பார்த்தசாரதி ஸ்துதியில்,

பா ஹூத்வயோபேததேஹம் பாஞ்ச
ஜந்யாக்ய சங்க ஸ்புரத்தக்ஷ பாஹூம்
ஸ்ரீகாருடஸ்வீயவாஹம்புத்ர
பௌத்ராதி ஸம்பூர்ணதி
வ்யஸ்வகேஹம் ஸ்ரீ

பொருள்: இரண்டு கைகளை உடைய கோலத்தில் இருப்பவரும், பாஞ்சஜன்யம் என்ற சங்கை வலது கையில் உடையவரும், கருட வாகனம் கொண்டவரும், மகனான ப்ரத்யும்னன், பேரனான அனிருத்தன் ஆகியோர் சூழ, கோவில் கொண்ட ஸ்ரீபார்த்தசாரதியை பூஜிக்கிறேன்.

## நாச்சியார் கோயில்

ஸ்ரீநிவாஸப் பெருமாள் மூலவருக்கு இடது புறம் ப்ரத்யும்னரும், அநிருத்தரும், புருஷோத் தமனும் வலப்புறம் சங்கர்ஷணர் என்ற பலராமரும் உள்ளனர்.

பகவான் ஸ்ரீமன் நாராயணனிற்கு 1000 நாமங்கள் இருந்தாலும் பின்வரும் 24 திருநாமங்கள் ஜபிப்பது மிகவும் புண்ணியம் தரும். அதில் 6 மற்றும் 8 ஆம் திருநாமங்கள் முறையே ப்ரத்யும்னன் மற்றும் அநிருத்தனை குறிப்பிடுகின்றன என்றால் இதன் மகத்துவம் நமக்கு நன்கு விளங்கும். அநிருத்தன் ப்ரத்யும்னனின் புத்திரனும் ஸ்ரீ க்ரிஷ்ணரின் பேரனும் ஆவான்.

ஓம் கேசவாய நம:
ஓம் சங்கர்ஷனாய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் வாசுதேவாய நம:
ஓம் மாதவாய நம:
ஓம் ப்ரத்யும்னாய நம:
ஓம் கோவிந்தாய நம:
ஓம் அனிருத்தாய நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் புருஷோத்தமாய நம:
ஓம் மதுசூதனாய நம:
ஓம் அதோக்ஷஜாய நம:
ஓம் த்ரிவிக்ரமாய நம:
ஓம் லக்ஷ்மி நரசிம்ஹாய நம:
ஓம் வாமனாய நம:
ஓம் அச்சுதாய நம:
ஓம் ஸ்ரீதராய நம:
ஓம் ஜனார்தனாய நம:
ஓம் ஹ்ரிஷீகேசாய நம:
ஓம் உபேந்த்ராய நம:
ஓம் பத்மநாபாய நம:
ஓம் ஹரயே நம:
ஓம் தாமோதராய நம:
ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம:







# மற்றவரின் செயல்களே அவர்களின் பார்வையை நிர்ணயிக்கும்

மற்றவர் நம்மை தவறாக நினைத்து விடுவார்களோ என்ற எண்ணம் மக்கள் மனதில் மேலோங்கி உள்ளதால்தான், மக்கள் பல்வேறு பிரச்சனைகளில் சிக்கி அவதிப்படுகின்றனர்.

இன்னும் ஒருபடி மேலே சொல்ல வேண்டுமென்றல், மற்றவர் நம்மை தாழ்வாக எண்ணிவிடுவார்களோ என்ற எண்ணத்தால் ஆடம்பர வாழ்க்கை, நவநாகரீக வாழ்க்கை முறை போன்ற வற்றை பின்பற்ற வேண்டும் என்ற எண் ணம் மேலோங்கி, வீணாக தங்களது பொரு ளாதாரத்தையும், தங்களது மகிழ்ச்சியையும் இழந்து மக்கள் தவிக்கின்றனர்.

உண்மையில் மற்றவர் பார்வையில் நமது வாழ்க்கை இல்லை, அவர்களின் செயல்கள்தான் அவர்களின் பார்வையின் வெளிப்பாடாக அமைகிறது என்பதை புரிந்து கொண்டாலே போதும், மற்ற வருக்காக நாம் வாழும் வாழ்க்கையின் நிலை மாறிவிடும்.

தற்போது மக்கள் அனைவரது பிரச்ச னையும் எளிதாக தீரவேண்டுமென்றால் எளிமையான ஒரு வழிமுறை உள்ளது. மற்றவரின் செயல் எப்படி மற்றவரின் மீதான பார்வையாக மாறும் என்பதை எளிமையாக பார்ப்போம்.

1. மத்தியான வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது . மரத்தடியில் ஒருவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த விறகுவெட்டி அவனப் பார்த்தான் , கடுமையான உழைப்பாளியாக இருக்க வேண்டும் உழைத்த களைப்பால் தான் இந்த வெயிலிலும் இப்படி உறங்குகிறான். என நினைத்து கொண்டே சென்றான்.
2. அடுத்ததாக திருடன் ஒருவன் அந்த வழியாக வந்தான் " இரவு முழுவதும் கண் விழித்து திருடி இருப்பான் போல தெரிகிறது அதனால் தான் இந்த சுட்டெரிக்கும் வெயிலிலும் அடித்துப் போட்டது போல் தூங்குகிறான் " என நினைத்துக் கொண்டே சென்றான் .
3. மூன்றாவதாக குடிகாரன் ஒருவன் அந்த வழியாக வந்தான் . காலையிலேயே நன்றாக குடித்துவிட்டான் போல இருக் கிறது. அதனால்தான் குடிமயக்கத்தில் இப்படி விழுந்து கிடக்கின்றன் என நினைத்துக் கொண்டே சென்றான் .
4. சிறிது நேரத்தில் துறவி ஒருவர் வந்தார். இந்த நண்பகலில் இப்படி உறங்கும் இவர் முற்றும் துறந்த ஞானியாகத்தான் இருக்க வேண்டும். வேறு யாரால் இத் தகைய செயலை செய்ய முடியும், என அவரை வணங்கி விட்டு சென்றார்.

# சனிபகவானின் தாக்கத்தை குறைக்கும் பைரவர்



அஷ்ட பைரவர்களும் அறுபத்தி நான்கு காலங்களில், அறுபத்தி நான்கு தோற்றங்கள் கொண்ட பைரவராகக் காட்சி தருகிறார்கள். இவரது ருதர் உருவம் நம்மை பிரம்மிக்க வைக்கும். அஷ்டமிகாலங்களில் இவருக்கு விளக்கு ஏற்றி வழிபட்டு வந்தால் நினைத்த காரியங்கள் கைகூடச் செய்வதில் வல்லவர் ஆவார்.

12 ராசிகளையும் தன் உடலில் அங்கங்களாகக் கொண்டவர் ஸ்ரீபைரவர். அவரிடம் விளக்கு வைத்து முறயிட்டால் வேண்டுவதை நிறைவேற்றி கொடுப்பார்.

நவக்கிரகங்களுக்கும் பிராண தேவதை யாக இருப்பவரும் பைரவரே. இவரைப் பின்பற்றி நமது வேண்டு கோளை நிறை வேற்றி கொள்ளலாம்.

பைரவரின் அருள் கிடைத்தால் போதும் வாழ்வு எளிதாகும். தேவ, அசுர, மானிடர்களும் அஞ்சும் கிரகம் சனி பகவான் ஆவார். சனிக்கு வரம் தந்து, இக்கடமையைச் செய்ய வைத்த சனியின் குரு ஸ்ரீபைரவரே ஆவார்.

**சனியின் தாக்கம் குறைக்கும் பைரவர்:**

சனியின் வாத நோயை நீக்கியவரும் பைரவரே. இவரின் சிறப்புகள் எண்ணி லங்கா ஒன்றாகும்.

தன் தமையன் எமன், பைர வரிடம் அதீத சக்திக்கு வரம் பெற்றதைக் கண்ட அவன் தம்பி சனீஸ்வரன், பைரவரை நோக்கி கடுமையான தவம் இருந்தான். அவரின் தவ வலிமையை மெச்சிய பைரவர் அவன் முன் தோன்றி, மும்மூர்த்திகள் உள்பட அனைவரையும், கால வர்த்தமான நிர்ணயப்படி ஜோதிட ரீதியாக சனிப்பெயர்ச்சிப்படி நல்லது தீயது செய்யும் சக்தி அருளினார்.

பைரவரை வழிபட்டால் எதுவானாலும் தீரும், சனீஸ்வரனிடம் ஒரு சத்தியபிராமாணம் பெற்றுக் கொண்டார்.

சனீஸ்வரனின் சஞ்சாரத்தால் எவர் ஒருவருக்கு கஷ்டம் கொடுக்க வேண்டி யிருந்தாலும், அவர்கள் பைரவரை வழி பட்டு சரணடைந்தால் அவர்களுக்கு சனீஸ்வரன் நன்மையையே செய்ய வேண்டும் என பைரவபெருமானிடம் வேண்டி பெற்று கொண்டார்.

சனியின் பார்வையால் பெரும் பாதிப்புக் குள்ளாவோர்கள் பைரவ வழிபாட்டை பின்பற்றி வருதல் உத்தமம் ஆகும்.

ஏழரை நாட்டுச்சனி, அஷ்டமச்சனி, ஜன்மச் சனியால் அவதிப்படுவோர் பைரவ வழிபாடு ஒன்றினால் மட்டுமே அத்தொல்லைகளிலிருந்து விடுபட முடியும்.

பைரவருக்கு 27 மிளகு வைத்து வெள்ளை மற்றும் சிவப்பு, மஞ் சள் துணியில் அதனை கட்டி நல்லெண்ணையில் முந்திய நாள் இரவு ஊற வைத்து அஷ்டமி வாரநாட்களில் ராகு காலங்களில் வணங்கிவருதல் சிறப்பான பலனை தரும்.

ராகு காலங்கள், வளர்பிறை அஷ்டமி மற்றும் தேய்பிறை அஷ்டமி மற்றும் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு மற்றும் அமாவாசை, பௌர்ணமி போன்ற நாட்களில் வழிபாடு செய்து வந்து வேலை வாய்ப்பு, கடன் தொல்லை, கல்யாண வரம் மற்றும் பணச் சேர்கை தொழில் தொடங்க உதவிப் பெறலாம்.

சனி தோஷம் மட்டுமல்ல மற்ற தோஷங்களின் கொடிய பலன்களைக் கூடப் போக்கும் ஆற்றல் பைரவரிடம் உண்டு. திசைக்கொன்றென விளங் கும் எட்டு பைரவர்கள் அஷ்ட பைரவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். சில கோவில் களில் பைரவிகளுடன் இணைந்து தம்பதி சகிதமாகவும் இந்த பைர வர்கள் காட்சிதருகிறார்கள்.

அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள், மாத இதழ்கள், புக் ஓர்க், அட்டைப்பட வடிவமைப்பு, போன்றவை தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்

Bhaanrajg Graphics

செல்: +91-8825844033

# வைரஸ் கிருமிகள் நெஞ்சு கபத்தை போக்கும் சுண்டைக்காய்

கொரானா மாதிரி கிருமிகளின் எதிர்ப்பு மருந்தாக சுண்டைக்காய் இருக்கிறது என்கிறார் அகத்தியர் பெருமான் தனது வைத்திய நிகண்டு நூலில்....

நெஞ்சின் கபம் போம்
நிறை இருமி நோயும் போம்
விஞ்சு வாதத்தின் விளைவு போம்
வஞ்சியரே வாய் கசபிக்கும் மாமலையில்
விளையும் சுண்டைக் காயை சுவைப்பதர்கே
– அகத்தியர்

நெஞ்சில் எந்த கபச் சளியும் நீக்கும். எந்த கிருமியானாலும் வரும் நோய்களும் போய்விடும். வாதசுரம் வலியும் போக்கும், இந்த அறிகுறி அனைத்தும் கொண்ட கொரானா வைரஸ் மட்டும் தப்பி விடுமா?

பத்து சுண்டைக் காயை அல்லது சுண்ட வத்தலை கலப்படமில்லாத பசு நெய்யில் அல்லது கலப்படமில்லா தேங்காய் எண்ணெயில் அல்லது கலப்படமில்லாத நல்லெண்ணெயில் வறுத்து, மெது மெதுவாக, ஒன்று ஒன்றாக சுவைத்து சுவைத்து சுவைத்து மூன்று நாள் சாப்பிட்டு வரவும்.

பின் இருநாள் இடை வெளிவிட்டு மீண்டும் சாப்பிட்டு வந்தால் கீழ்காணும் நோய்கள் குணமாகிறது.

வாத, கபச் சளி, இருமல், வலி, சுரம், நீக்குகிறது.

நாம் சாப்பிடும் பொருளிலேயே பல்வேறு கிருமி, நோய்கள் தீர மருந்தாகவே பல பொருட்கள் அமைந்து விடுகிறது. சுண்டைக்காய் சற்று கசப்புத் தன்மை இருந்தாலும், அதன் சுவை பழகிவிட்டால், விரும்பி சாப்பிடத் தோன்றும்.

குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே நமது பாரம்பரிய உணவுமுறையை பழக்கப்படுத்தினாலே போதும், எதிர் காலத்தில் அவர்களுக்குத் தேவையான நோயெதிர்ப்பு சக்தி தன்னால் அவர்களுக்கு கிடைத்துவிடும்.

ஒவ்வொரு குடும்பத்திலுள்ள அனைவரும், சுண்டக்காய் கூட்டு அல்லது சுண்டக்காய் வத்தல் கொழம்பாவது வைத்து சாப்பிட வேண்டும்.

❖ சுண்டை வற்றலை நெய்யில் வறுத்து பொடி யாக்கி சோற்றுடன் சேர்த்து பிசைந்து சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோயினால் உண்டாகும் கை கால் நடுக்கம், மயக்கம், உடற் சோர்வு, வயிற்றுப் பொருமல் முதலியவை நீங்கும்.







கீதா–ராஜன்

❖ சுண்டைக்காயை இரண்டாக நறுக்கி அதனுடன் பூண்டு, சின்ன வெங்காயம், மிளகு, சீரகம், கறிவேப்பிலை, கொத்தமல்லி இலை சேர்த்து நன்கு கொதிக்க வைத்து சூப் செய்து அருந்தி வந்தால் கபக்கட்டு, ஈளை, இருமல், மூலச்சூடு, மூலக்கடுப்பு, மூலத்தில் ரத்தம் வெளியேறுதல் போன்றவை நீங்கும். இரத்தத்தை சுத்தப்படுத்தி சிறுநீரைப் பெருக்கும். உடல் சோர்வை நீக்கும். தலைச்சுற்றல், வாந்தி, மயக்கம் நீங்கும். மேலும் மார்புச்சளி, தொண்டைக்கட்டு போன்றவற்றிற்கு சிறந்த நிவாரணி யாகும். ஆஸ்துமா, காசநோயாளிகள் இதனை அருந்திவந்தால் பாதிப்பு குறையும்.

❖ பால் சுண்டைக்காயைச் சமைத்து உண்ணக் கபக் கட்டு, ஈளை, காசம், இருமல், மூலச்சூடு, மூலக்கடுப்பு, திமிர்ப்பூச்சி வெளியேறும்.

❖ சுண்டைக் காயை உப்பு கலந்த புளித்த மோரில் 2 முறை ஊறவைத்து காயவைத்து எண்ணெயில் வறுத்து உணவில் இரவில் பயன்படுத்தி வர மார்புச் சளி, இரைப்பிருமல் (ஆஸ்துமா), காச நோய் குணமாகும். வயிற்றுப் போக்கு நின்றுவிடும்.



❖ சுண்டை வற்றல், கறிவேம்பு, மிளகு, சீரகம், வெந்தயம், சம அளவாக எடுத்து பொன்னிறமாக வறுத்து சிறிது உப்பு சேர்த்து ஒரு சிட்டிகையளவு உணவுடன் 3 வேளை சாப்பிட பசி மந்தம், சுவையின்மை, மலக்குடல் கிருமிகள், மூலம் குணமாகும்.

❖ சுண்டைக்காயைக் காயவைத்து போதுமான அளவு நன்றாகப் புளித்த மோரும், உப்பும் கலந்து காயவைத்து உலர்த்தி எடுத்து உணவுடன் உண்டு வர நீரிழிவு நோய் தணியும்.

❖ சுண்டை வற்றல், கறிவேப்பிலை, மாங் கொட்டை பருப்பு, ஓமம், நெல்லி வற்றல், மாதுளை ஓடு, வெந்தயம் சம அளவாக எடுத்து தனித்தனியே இளவறுப்பாக வறுத் துப் பொடி செய்து 5 கிராம் பொடியை 2 வேளை 1 டம்ளர் மோருடன் கலந்து சாப்பிட தீக்குற்றத்தால் உண்ட சுவையின்மை, வயிற்றுப் புழு, நிலைக் கழிச்சல், சீதக் கட்டு நீங்கும். இதையே மார்பு சளி செரியாக் கழிச்சல், மூலம், நீரிழிவு இவற்றிற்கும் சாப் பிட கட்டுப்படும்.

❖ சுண்டைக் காயை சிற்றாமணக்கு எண் ணெய் விட்டு வறுத்து, உப்பு, மிளகு, சீரகம், கறிவேப்பிலை பொடித்துப் போட்டு உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வர மூலம், மந்தம், செரியாமை குணமாகும்.

❖ சுண்டைக்காய் வேர்ப் பட்டையை பொடி செய்து தேங்காய்க் குடுக்கையில் வைக்க வேண்டும். இதனை ஒரு சிட்டிகை மூக்கிழுக்க, தலை நோய், நீரேற்றம், மண்டைக் குடைச்சல், ஒற்றைத் தலைவலி, மூக்கில் நீர்ப்பாய்தல் நீங்கும்.

❖ சுண்டை வேர், தும்பை வேர், இலுப்பை பிண்ணாக்கு சம அளவாக எடுத்து இடித்துப் பொடி செய்து முகர இழுப்பு நோய் தணியும்.சுண்டை வேர் கைப்பிடியளவு எடுத்து அரை லிட்டர் நீரில் போட்டு 200 மில்லியாக வற்றக் காய்ச்சி வடிகட்டி குடிக்க வலிகாய்ச்சல் குணமாகும்.

**கீதா–ராஜன்,** சென்னை
தொடர்பு எண்: 8825844033

# பிரசாதத்திற்கு வெள்ளிக்காசு வாங்கிய சிவன்

திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமியை, அர்த்த ஜாம பூஜையின் போது தரிசிப்பதை, வழக்கமாக கொண்டிருந்தார், வேங்கடேச அய்யாவாள். காவிரியின் மறுகரையிலிருந்து ஆற்றை கடந்து வந்து, மகாலிங்க சுவாமியை தரிசனம் செய்து, திரும்புவார்.

ஒருநாள், வழக்கமாக தரிசனத்திற்காக புறப்பட்ட போது, மழையின் காரணமாக, காவிரியில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

இதனால், 'ஈஸ்வரா... இது என்ன சோதனை... நான் எப்படி உன்னை வந்து பார்ப்பேன்...' என்று மனம் கலங்கினார் வேங்கடேச அய்யாவாள்.

அவரின் சிந்தனை எல்லாம் சிவ சிந்தனையிலேயே நிலைத்திருக்க, அப்படியே நின்றிருந்தார்.

அப்போது, அங்கே வந்த திருவிடை மருதூர் கோவில் அர்ச்சகர், 'சுவாமி... அர்த்த ஜாம பூஜையின் போது, உங்களை காணவில்லையே எனத் தேடினேன்.

வெள்ளத்தின் காரணமாக நீங்கள் வரவில்லை போலிருக்கு ! இந்தாருங்கள் சுவாமி பிரசாதம்...' என்று கூறி, பிரசாதத்தை கொடுத்தார்.

'ஈஸ்வரா... உன் கருணையை என்னவென்று சொல்வேன்?' என மனம் உருகி, பணிவோடு பிரசாதத்தை பெற்று, பிரதி உபகாரமாக, ஒரு வெள்ளி காசை, அர்ச்சகருக்கு தட்சணையாக அளித்தார், வேங்கடேச அய்யாவாள்.

மறுநாள் காலை, சன்னிதியை திறந்து உள்ளே நுழைந்த அர்ச்சகர், சுவாமி விளக்கை தூண்டினார். வெளிச்சம் பெரிதாகப் பரவ, அங்கே, சிவலிங்கத்தின் மேல், ஒரு வெள்ளிக் காசு இருந்ததைப் பார்த்து ஆச்சரியமடைந்தார். இது எப்படி வந்தது என்று அவருக்கு புரியவில்லை.

அன்று மாலை, காவிரியில் வெள்ளம் வடிந்து விட்டதால், அர்த்த ஜாம தரிசனத்திற்கு வந்த வேங்கடேச அய்யாவாள், அர்ச்சகருக்கு நன்றி கூறினார்.

'எனக்கு எதற்கு நன்றி கூறுகிறீர்கள்...' என்றார் அர்ச்சகர்.

'என்ன சுவாமி இப்படி சொல்றீங்க... ஆற்றில் வெள்ளம் வந்ததால், கோவிலுக்கு வர முடியாமல், நான் மறுகரையில் நின்றிருந்தபோது, நீங்க தானே எனக்கு, பிரசாதம் தந்தீங்க; நான் கூட உங்களுக்கு தட்சணை தந்தேனே...' என்று கூறி விவரித்தார்.

அர்ச்சகருக்கு ஏதோ புரிந்து, கருவறைக் குள் ஓடி, கையில் வெள்ளிக் காசுடன் திரும்பியவர், 'ஆறு நிறைய வெள்ளம் ஓடும் போது, நான் எப்படி ஆற்றை கடந்து வந்திருக்க முடியும்... மழையின் காரணமாக, நேற்று நான் எங்கும் போகவில்லை.

இன்று காலை சன்னிதியை திறந்தால், சுவாமி மீது, இந்த வெள்ளிக் காசு இருந்தது; இப்போது, நீங்கள் கூறிய பின்தான், உண்மை புரிகிறது...' என்றார்.

உள்ளம் நெகிழ்ந்த வேங்கடேச அய்யாவாள், 'ஈஸ்வரா... அடியேன் மனம் வருத்தம் அடையக் கூடாதென்று, தரிசனம் தந்ததோடு, பிரசாதமும் தந்த என் தெய்வமே...' என்று கண்ணீர் மல்க, இறைவனை துதித்தார்.





# ஒரே நாளில் 2 அவதாரங்கள்



பெருமாளும் சிவனும் பல்வேறு அவதாரங்கள் எடுத்து பல்வேறு திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளனர். இதில் பெருமாளின் பத்து அவதாரங்களை குறிப்பிட்டு பல்வேறு புராண இதிகாசங்கள் படைக்கப்பட்டுள்ளது.

சிவபெருமானின் ஒவ்வொரு அவதாரத்திற்கும் ஒவ்வொரு காரண காரியங்கள் இருந்துள்ளதாக அறியப்பட்டாலும், சிவனும் பெருமாளும் ஒரே நேரத்தில், எடுத்த அவதாரம் மிக முக்கிய அவதாரமாக போற்றப்படுகிறது.

பக்தனை காக்க பெருமாள் நரசிம்ம அவதாரத்தை நிகழ்த்தினார், பெருமாளை காக்க சிவன் சரபேச அவதாரம் எடுத்தார் இந்த இரண்டு அவதாரங்களும் ஒரே நாளில் நிகழ்ந்துள்ளது.

விஷ்ணுவின் நரசிம்ம அவதாரத்தை அடுத்து ஈசனின் சரபேச அவதாரம் நிகழ்ந்ததால், நரசிம்மர், சரபேஸ்வரர் இருவருக் கும் ஒரே நாளில் ஜெயந்தி கொண்டாடப்பட்டு வருகிறது.

நரசிம்மரின் கோர உருவத்தை கண்டு நடுங்கிய தேவர்களின் நடுக்கத்தை தீர்க்க, சிவபெருமான் அழகிய சரபேசப் பறவை உருவம் கொண்டு நரசிம்மரை சாந்நதப்படுத்தி தேவர்களின் நடுக்கத்தை தீர்த்ததால் நடுக்கந்தீர்த்த பெருமான் என்று சிவனுக்கு ஒரு சிறப்பு பெயரும் உண்டு.

# ஒருமுனைப்படுத்துதல் மூலம் உங்கள் மனோசக்திக்கு அதிக சக்தியூட்டுங்கள்



அன்பு குருதேவர் தன்னுடைய அனுபவத்தைக் கூறுகிறார்: "கிரகிக்கும் தன்மை உடையவராவதற்கான வழி அமைதியாக அமர்ந்து உங்கள் எண்ணங்களை ஒரு தகுதியான விருப்பத்தின் மீது உங்கள் மனமும் சிந்தனையும் அந்தக் கருத்தில் முழுவதுமாகக் கரைந்துவிடும்வரை ஒரு முகப்படுத்த வேண்டும். அப்பொழுது மனோசக்தி தெய்வீகமாக எல்லாம் அறிந்ததாகவும் சர்வசக்தி படைத்ததாகவும் ஆகிவிடும். மேலும் உங்கள் குறிக்கோள் நிறைவேறும்படி வெற்றிகரமாக அதனை உபயோகிக்க முடியும். நீங்கள் சும்மாவே உட்கார்ந்து கொண்டு வெற்றி உங்கள் மடியில் வந்து விழும் என்று காத்துக்கொண்டிருக்க முடியாது. ஒருமுறை உங்கள் பாதை நிர்ணயிக்கப்பட்டு, உங்கள் மன உறுதி திடமாகி விட்டால் நீங்கள் செயல்முறையில் முயற்சியை எடுக்க வேண்டும். பின்னர் வெற்றியடைய உங்களுக்கு தேவையானதெல்லாம் உங்களிடம் வர ஆரம்பிப்பதை நீங்கள் காண்பீர்கள். எல்லாமே உங்களை சரியான திசையில் முன்செலுத்தும் தெய்வீக சக்தியூட்டப்பட்ட உங்களுடைய மனவலிமையில்தான், உங்களுடைய பிராத்தனைக்குப் பதில் இருக்கிறது. அப்படிப்பட்ட மன வலிமையை நீங்கள் உபயோகிக்கும்பொழுது, உங்களுடைய பிரார்த்தனைக்கு விடை கிடைக்கும் பாதையை நீங்கள் திறக்கிறீர்கள். இதுதான் எனது அனுபவம். என் மனோதிடத்தைச் சோதிப்பதற்கென நான் நில விஷயங்களை முயற்சித்துப் பார்ப்பது வழக்கம். ஆனால் இப்பொழுதெல்லாம் அம்மாதிரி செய்வதில்லை. அது பலனளிக்கிறது என்பது எனக்குத் தெரியும்."

**87**
**பாகம்**
**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**
**மனித வாழ்வு மேம்படுவதற்காக**

அவர் தொடர்கிறார்: "ஒரு முறை வெகுகாலத்திற்கு முன்பு என் மாணவர்களில் ஒருவன் தவறான பாதையில் செல்வதைப் பார்த்தேன். பின்னால் நிகழப்போகும் வருந்தத்தக்க விளைவுகளை முன்கூட்டியே உணர்ந்து, அவனுடைய வாழ்க்கை சென்றுகொண்டிருந்த பாதையின் வழியிலிருந்து அவனை திருப்பக்கூடிய ஒவ்வொரு சாத்தியமான காரணத்தையும் எடுத்துக் கூறினேன்; ஆனால் என்னுடைய எவ்வளவு மனோசக்தியும் அவனுக்கு உதவ முடியவில்லை. ஏனென்றால், அவன் தீய வழியில் போகவேண்டும் என்று அவனது மனதை திடப்படுத்திக் கொண்டுவிட்டான். "சரிதான்", நான் எனக்குள்ளேயே முடிவாகக் கூறிக்கொண்டேன், " இனி 'பிரியாவிடை' தான்: அவன் வழியிலேயே போகட்டும்." ஆனால் சீக்கிரமே எனக்கு அவன்மீதுள்ள அளவு கடந்து அன்பும் கவலையும் மீண்டும் மேலெழுந்து நின்றன. நான் ஓர் ஆலமரத்தடியில் அமர்ந்து, அவனை மனக்கண்ணில் பார்க்கத் தொடங்கினேன். நான் தீவிர ஆர்வத்துடன் மீண்டும் மீண்டும் ஒரு மானசீகச் செய்தியை அவனுக்கு ஒலி பரப்பினேன்:

"நீ திரும்பி வரவேண்டும் என உனக்கு கட்டளையிடுமாறு இறைவன் என்னிடம் கூறியுள்ளான்." அன்று மாலையிலேயே திரும்பி வருகிறான் என்ற உள்ளுணர்வில் எனது உடலும் மனமும் புளகாங்கிதம் அடைந்தன. இறுதியில் அவன் அங்கே வாயிலில் இருந்தான்: "கெட்டழிந்த புதல்வன்" மீண்டும் அரவணைப்பில் வந்துவிட்டான். அவன் தலைவணங்கிக் கூறினான். " நாள் முழுவதும், நான் எங்கு சென்றாலும், எதைச் செய்தாலும் உங்கள் உருவத்தைத்தான் பார்த்தேன். இதெல்லாம் எதைக் குறிக்கின்றது ? " நான், "இறைவன் என்மூலமாக உன்னை அழைத்துக் கொண்டிருந்தான், " எனப் பதில் கூறி, மேலும், " இது அவனது அழைப்பு, என்னுடையதல்ல. என் விருப்பத்தில் சுயநல நோக்கம் இல்லை; ஆனால் நீ வரும் வரையில் நான் இந்த இடத்தைவிட்டு நகருவதில்லை என என் மனதில் நிச்சயித்துக்கொண்டேன், " எனக்கூறினேன். அம்மாதிரியான தீர்மானம் உலகத்தையே மாற்ற முடியும். ஓர் அற்புதமான சக்தி! "


குருப்ரியா

மேலும் அவர் தொடர்கிறார்: " ஆகவே, ஆழ்ந்த பிரார்த்தனை பலிக்கிறது. கவனத்தைச் சிதறடிக்கும் விஷயங்கள் குறைவாக இருக்கும் இரவுநேரம்தான் பிரார்த்தனைக்கு மிகச் சிறந்த நேரம். தேவைப்பட்டால், மாலையில் சற்று நேரம் தூங்குங்கள். அதனால் இரவில் உங்கள் பிரார்த்தனையின்பொழுது நீங்கள் முற்றிலும் விழிதிதிருப்பீர்கள். இறைவனுடன் உங்கள் பொழுதைக் கழிக்கலாம். முதலில் கடினமாகத் தோன்றும். ஆனால் நீங்கள் முயற்சி செய்து கொண்டேயிருந்தால். அது எளிதாகிவிடும். அதன் பலன்களைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். உங்கள் மனோதிடம் சக்தி வாய்ந்ததாக மாறியவுடன், இறைவன் பதிலளிக்கத் தொடங்குகிறான். எல்லையற்ற பரம்பொருள் தன்னுடைய மௌன விரதத்தைக் கலைக்க

திருவுள்ளம் கொண்டால், உங்கள் ஆனந்தத்தை உங்களால் தாங்க முடியாது. ஆனால் மற்றவர்களுக்கு உங்களுடைய பிரார்த்தனைகளின் சக்தியை நிரூபித்துக் காண்பிக்க வேண்டும் என்ற ஆணவ ஆசை இருந்தாலோ அல்லது அதை வியாபாரமாக்கினாலோ நீங்கள் அந்த சக்தியை இழந்து விடுவீர்கள். அதனபின் இறைவன் உங்களுக்கு மறுமொழி கூறவே மாட்டான்; நீங்கள் அவனை அச்சுறுத்தித் துரத்திவிடுகிறீர்கள். நீங்கள் உண்மையானவராகவும் அவனுக்காகவே அவனை நேசிப்பவராகவும் இருந்தால் மட்டுமே அவன் உங்களிடம் வருவான். நீங்கள் உங்களையே மெச்சிக்கொண்டு விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பினால், நீங்கள் அவனை நாடவில்லை, ஆனால் உங்களுடைய அகந்தையின் புகழையும் போற்றுதலையுமே நாடுகிறீர்கள் என்பதை அவன் காண்கிறான்; அதனால் அவன் வரமாட்டான்.”

இறைவனை நாடிச்செல்ல வேண்டும் அல்லது இறைவனை அறிய வேண்டும் என்ற எண்ணமுடைய, குறிக்கோளுடைய பக்தன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதுபற்றி மிகுந்த கண்டிப்புடன் பகவத்கீதை மூலமாக பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அருளியுள்ளான். அதை கடைபிடிப்பவன் நிச்சயமாகவும் இறைவனடி சேரத்தான் செய்வான். இறைவனை அடையவேண்டும் என்ற எண்ணம் உடைய ஒருவன் வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே தனக்கு சில மாற்றங்களையெல்லாம் ஏற்படுத்திக்கொள்வான், அது என்னவென்றால், இறைவனிடத்தில் எப்பொழுதும் தன் மனம் இருக்க வேண்டுமென்றால், குருதேவர் கூறுவதுபோல் ஒரு முனைப்படுத்துதல் மூலம் மனோசக்திக்கு அதிக சக்தியூட்ட வேண்டும் என்று நினைத்தால் முதலில் தமது உணவினை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். நெறியுடன் கூடிய உணவினை உட்கொள்ள வேண்டும் . நம் பரிசுத்தமான ஆன்மாவை சுமந்து கொண்டிருக்கும் உடலுக்கு தேவை எதுவோ அதை மட்டும் தான் உட்கொள்ள வேண்டும். நம்



ஆன்மாவை இவைனுடன் சேர்ப்பதென்பதே குறிக்கோள் என்றாகிவிடும்பொழுது உணவினை சரிசெய்வது மிகவும் முக்கியம். இல்லையேல் உணவினால் உடல் கெடும்; பின்னர் மனம் கெடும். இவை இரண்டும் நன்றாக இருந்தால் மட்டுமே இறைவன்மேல் மனதை ஒருமுகப்படுத்தி தியானம் செய்ய இயலும். சத்துவகுணத்தை உடையவனாகயிருந்தால் மிகவும் எளிது. இறைவனை அடைவதற்கு தியானம் செய்ய வேண்டும். தியானம் செய்வதற்கு உடல் மனம் இவற்றின் ஆரோக்கியமும் அதனைத் தொடர்ந்து ஆயுளும், சக்தியும் எல்லாம் தேவை. இதயத்திற்கு அமைதியும் திருப்தியும் ஏற்படுத்த வேண்டும். இவற்றை அதிகரிக்கச் செய்கின்ற உணவினை உட்கொள்ளவேண்டும். மாறாக தாமஸ குணமுடையவன் எவ்வாறு தனது உணவு முறைகளை பயன்படுத்திக் கொள்வான் என்பதை பகவான் கிருஷ்ணன் கூறுகிறார்.

யாதயாத கதரஸம் பூதி பர்யுஷிதம் ச யத்
உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜனம்
தாமஸப்ரியம்.

தாமஸகுணமுடையவர்கள் பழகியதும். சுவைமாறியதும், துர்கந்தமுண்டாக ஆரம்பித்ததும் சமையல் செய்துபின் ஓர் இரவு கழிந்ததும் மற்றவர்கள் உண்டதன் பாக்கியானதும் சத்து எடுத்தபின் சக்கையாக உள்ளதுமாகிய உணவு பொருட்களை தமோகுணம் அதிகரித்த வர்கள் விரும்புகிறார்கள். இவையாவும் உடலுக்கோ, மனதிற்கோ, திருப்தியையும் ஆரோக் கியத்தையும் ஏற்படுத்த முடியாது. இவை உடலுக்கும் மனதிற்கும் மயக்கத்தையும் பலக் குறைவையும் உண்டாக்குகிறது. தாமஸ குண முடையவர்கள் இவற்றைத்தான் விரும்புவர்.
(பகவத் கீதை அத் 17 ஸ்லோகம் 10)

“மேலே கூறிய செயலினால் ஒருமுகப்படுத்துதல் மூலம் மனோசக்திக்கு அதிக சக்தியூட்ட முடியாது. உணவு என்பது மனதிற்கு மிக முக்கியமானது. முதலில் உடலுக்கு முக்கியம் உணவு. இதுபோன்ற உணவு உண்ணுவதால் உடல் கெட்டுப்போகவும் அதனால் மனமும் பாதிப்படையவும் ஏதுவாகும். அதனால் ஒருமுகப்படுத்துதலும் நடக்காது.”

மற்றொரு விஷயம் என்னவென்றால், இறைவனை அடைய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடையவன் ஐம்புலன் களையும் அடக்கிவாழும் இறைவெறியனான பக்தன், தனது பிறவி முழுவதுமே தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்து கொண்டிருப்பவனாவான். ‘இறைவன் மட்டும் போதும்’ என்ற மனப்பாங்கில் வாழுவான். அதற்காக அவன் தன்னுடைய எல்லா ஆசைகளையும் கைவிட்டு வாழுவான். அப்படிப்பட்டவனுக்கு கர்மங்களிலிருந்து அவன் விடுதலை பெற்றவனாகி விடுகிறான். அப்படிப்பட்டவன் எப்படி வாழவேண்டும் என்று பகவான் கிருஷ்ணன் கூறுகிறார்.

“நைஷ்கர்ம்யசித்தி (இனிமேல் இவ்வுல கில் அந்த பக்தனுக்காக எந்தக் கடமையும் மீதி யின்றி முடிந்துவிட்ட நிலை) பெற்ற ஒருவன் (மகாத்மா) மக்கள் மத்தியிலிருந்து வெகு தூரத்திலுள்ள பரிசுத்தமான ஒரு தனித்த இடத்தில் தனித்து வசிக்க வேண்டும்.

ஸம்சாரம் சம்பந்தப்பட்ட எண்ணங்களோ, கர்மவாஸனைகளோ சிறிதளவுகூட இல்லாமல் புத்தியை களங்க மற்றதாக்கிவிட வேண்டும். தான் பயணம் செய்வது ஸாத்வீகப்பாதையாகையால் மனதையும் புலன்களையும் உலக வியாபாரங்களுடன் எந்தத்தொடர்புமில்லாமல் அடக்க வேண்டும். விருப்பு வெறுப்புகளாலும் அல்லது மற்ற எந்த விஷயங்களாலும் மனது எந்த விதத் திலும் பாதிப்படையக்கூடாது.

இறை அனுபூதிபெறுவதற்காக, உடலை நிலைநிறுத்துவதற்காக, மிகச்சிறிதளவு உணவு மட்டும் உட்கொள்ள வேண்டும். இவ்வளவும் சாத்தியமானால் பிறகு சரீரம், வாக்கு, மனம் ஆகிய மூன்று கரணங்களை அசையவிடாமல் நன்குக் கட்டுபடுத்திக்கொண்டு தியானத்தில் மூழ்கவேண்டும். ஒரு நொடிகூட லட்சியத்தை மறக்க வாய்ப்பளிக்கக்கூடாது, வைராக்கியம் ஒவ்வொரு நாளும் அதிகரித் துக்கொண்டிருக்கவேண்டும். இந்த நிலையில் அகங்காரம், கோபம் இவை இல்லாமலும் எந்தப் பொருளையும் ஏற்காமலும் சிறிது நாள் தியானத்தில் மூழ்கியிருந்தால் காலப்போக்கில் ஆத்மஸாக்ஷாத்சாரம் சித்தித்து பரமசாந்தி கைவரப்பெற்று பின்னர் பிரம்மத்தை அடையலாம். (பகவத் கீதை அத் 18 ஸ்லோகம் 51, 52, 53)

இவ்வாறு பகவான் பகவத் கீதையில் அருளியுள்ளார். இவ்வாறுதான் குருதேவரும் கூறுகிறார், “ஜனங்கள் கூடுமிடத்திற்குச் செல்ல வேண்டாம்.” அங்கே மக்கள் உலக வியாபாரங்களில் மூழ்கியிருக்கின்றனர். அங்கே இறைவனைப்பார்க்க இயலாது. எப்பொழுதும் இறைவனை மனதில் நிறைத்தவாறு இருக்கவேண்டும் என்றால் தியான ஆலயங்களில்தான் செல்ல வேண்டும். அங்கே கிடைக்கப்பெறுகின்ற அமைதி வேறு எங்கேயும் கிடைக்கப்பெற வாய்பிராது. மக்கள் கூட்டங்களில் செல்வதைத் தவிர்க்கத்தான் வேண்டும். நமக்கு இறைவன்தான் முக்கியம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இக்கால மக்கள் நம்மை நேர்பாதையிலிருந்து திருப்பிவிடுவர். இவ்வாறான அம்சங்கள் ஒருமுனைப்படுத்துதலுக்கு உதவாது. எனவே அவற்றையெல்லாம் தவிர்த்து, இறைவன்தான் நமக்கு எல்லா பாதுகாப்பை யும் விட மேலான பாதுகாப்பு என்பதை உணர்ந்து, மனோசக்தியூட்டுவது மட்டுமின்றி, இறைவனையும் அடையலாம் என்பதை நமக்கு இறைவனே உணர்த்துவான்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909



# மேகநாதன்

மேகநாதன் இலங்கை வேந்தன் ராவணேஸ்வரனுக்கும் மண்டோ தரிக்கும் பிறந்தவன். அவன் பிறந்து அழும் ஒசை கேட்டு மேகங்களே பயந்து நடுங்கியதால் இராவணன் மேகநாதன் என பெயர் வைத்தான்.

இந்திரவித்தை இதை கற்க அளப்பரிய ஞானம், திறமை வேண்டும். இதுவரை இந்திர வித்தை அறிந்தவர்கள் மூன்று பேர் மட்டுமே. அவர்கள் விக்ரமாதித்தன், சாலிவாகனன் மற்றும் இந்திரஜித்.

இவன் ஒருவனே மும்மூர்த்திகளை நோக்கி நேரடியாக தவம் செய்து அவர்களின் பாசுபதம், பிரம்மாஸ்திரம், வைஷ்ணவாஸ்திரம் பெற்றவன். மகாபாரத்தில் மும்மூர்த்திகளின் ஆயுதம் பெற்ற ஒரே வீரன் அஸ்வத்தாமன்

தேவாதி தேவனான இந்திரனையே வெற்றி பெற்றதால் இந்திரஜித் என்னும் அழியாப் புகழ் பெற்றவன்.

காவியம் கண்ட ஒரே அதிமகாரதி. 12 மகாரதிகளுக்கு இணையானவன். 86,40,000 வீரர்களுடன் சண்டை போடும் திறன் மிக்கவன். (ராமர், கிருஷ்ணர், இந்திரஜித், ஹனுமார் போன்றோருடன் சிவனின் அவதாரங்களாகிய வீரபத்ரர், பைரவர் ஆகியோரும் அதிமகாரதி ஆவார்கள்)

அனுமன் இலங்கை வந்த போது அவன் அழகை பார்த்து சிவனின் புத்திரனோ இல்லை அஷுவினி குமாரனோ யார் இந்த பேரழகன் என ஆச்சரியம் பட்டார். அனுமனையே கட்டி இழுத்து வந்தவன். ராம லக்ஷ்மணரை மூர்ச்சை போட வைத்தவன்.

மிகப் பெரிய போர்வீரர்களில் ஒருவனாக அவர் கருதப்படுகிறான். இவன் மந்திர வலி மைப்படைத்தவன். இவனை ராமாயணம், மகா பாரதம், புராணங்கள் மற்றும் வேதங்களில் கூறப்பட்டுள்ளபடி பூமியில் இதுவரை பிறந்த சிறந்த போர் வீரன் என்று கருதப்படுகிறான்.

இந்திரஜித் 670 லட்சம் வானரங்களை ஒரே நாளில் கொன்றான். இந்தப் போரில் கிட்டத்தட்ட பாதி வானர இனம் அழிந்தது.

அவன் சக்ராஜித், ராவணி, வாசவஜித், வரிதனதா மற்றும் கானாந்தா என்றும் அழைக்கப் பட்டான். சுலோச்சனா இந்திரஜித்தின் மனைவி யாவர். மேகநாதன் மந்திர போர், சூனியம் மற்றும் தந்திரம் ஆகியவற்றில் நிபுணராக இருந்தான். சுலோச்சனா பாம்புகளின் அரசனான சேச நாகனின் மகள் ஆவார். இவளை இராவணியின் மகனான இந்திரஜித்து மணந்து கொண்டான். கதைகளில் சுலோச்சனா வீரம் மிகுந்தவளாகக் காட்டப்படுகிறாள். இந்திரஜித்து இராமனுடன் போரிடச் செல்கையில் அழாமலும் அவனைத் தடுக்காமலும் சுலோச்சனா வீரத்துடன் இருந்த தாகக் கூறப்படுகிறது.

இவன் ஒருவனே நிகும்பலா என்னும் அதர்வண காளியின் தீவிர பக்தன். நிகும்பலா தேவியே இன்று வணங்கும் ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி. அதனால் மேகநாதனை வெற்றி கொள்வது என்பது ராம லக்ஷ்மணர்களுக்கே பிரம்ம ப்ரயத்தனமாக இருந்தது.

இவனை கொல்பவன் கல்யாணமாகி 14 வருடம் மனைவியுடன் சேராமலும் 14 வருடங்கள் நித்திரை கொள்ளாதவன் ஆகியும் இருக்க வேண்டும் என்னும் ஓர் வித்தியாசமான வரம் பெற்று இருந்தான். இவன் நிகும்பலா யாகம் செய்து முடித்து விட்டால் அவனை அழிப்பது என்பது எவராலும் முடியாத காரியம் என்னும் ரஹஸ்யத்தை விபீஷணன் மூலமாக அறிந்த லக்ஷ்மணன் ஹனுமாநின் துணை கொண்டு அந்த யாகத்தை அழித்தார்.

14 ஆண்டுகள் தூங்காமல் இருந்ததால் இலட் சுமணன் நிகும்பலையின் யாகத்தை அழிக்கும் ஆற்றலை பெற்றிருந்தார். பிரம்மா முன்னரே கூறியது போல நிகும்பலையின் வேள்வியை அழிக்கக்கூடியவன் இந்திரஜித்தையும் வதைக் கக்கூடும். அதன்படி இந்திரஜித் இலட்சுமணனால் வதைக்கப்பட்டான்.

கோடி அர்ஜுனர்கள் வந்தாலும் ஒரு மேக நாதனுக்கு ஈடாக முடியாது.

– எஸ்.ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593

## ஆன்மிக மலர்கள்

- ❖ நம்மை விடப் பெரியவர்கள் முன் கால் மேல் கால் போட்டு அமரக் கூடாது.
- ❖ நான்காம் பிறைச் சந்திரனைப் பார்க்கக் கூடாது.
- ❖ செப்புப் பாத்திரத்தில் பாலை வைக்கக் கூடாது. பால் திரிந்து விடும்.
- ❖ பட்டு வேட்டி மற்றும் புடவைகளை அணிந்துக் கொண்டு வைதீக காரியங்களைச் செய்யக் கூடாது.
- ❖ மருந்து மாத்திரை ஆகியவற்றை முகர்ந்து பார்க்கக் கூடாது.
- ❖ பெருமூச்சு விடுவது மிகப் பெரும் தவறு அதனால் துன்பங்கள் தான் அதிகரிக்கும் பெருமூச்சு விடுபவரின் மூச்சுக் காற்று அருகில் உள்ளவர் மேல் படக் கூடாது. பட்டால் அவருக்கும் கெடுதல் ஏற்படும்.
- ❖ இலவசமாக யாரிடமும் எள் பெறக் கூடாது.
- ❖ நமக்கு ஒருவர் இட்ட உணவைப் பழிக்கக் கூடாது.
- ❖ வீட்டில் எலுமிச்சை மூடியில் விளக்கேற்றக் கூடாது.
- ❖ விளக்கில் அல்லது நெருப்பில் தீப்பற்றிய துணியை மீண்டும் உடுத்திக் கொள்ளக் கூடாது.




ஆன்மிகமலர் மெயில் புக்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
செந்தில்நாதன்

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# பக்தி ஒன்றே மனிதனுக்கு ஆதாரம்

துன்பம் என்பது “சுளுக்கு” போன்றது. கடவுளை நம்பினால் துன்பமே இல்லை. அவன் சுளுக்கை எடுத்துவிடுவான்.

❖❖❖

“நடுங்காதே” எப்பொழுதும் வாழ்க்கையைக் கண்டு நடுங்காதே. “எதிர்காலம்” என்றவுடன் சிரிக்கிறார்கள் மனிதர்கள். அதுவே நடுங்காத மனிதனின், நிகழ்காலத் தன்மை.

❖❖❖

உனது உடலிலே நடுங்காத பாகம் நடுங்க வேண்டும். அதுவே உனது பல். திருமாலின் பெயரையும், சிவபெருமானின் பெயரையும் சொல்லாமல்.. வாழ்க்கையில் சிரிக்க முடியுமா? என்று சொல்லுவதே ‘மார்கழி விரதம்’.

❖❖❖

ஒரு தூங்குமூஞ்சி மரமும், ஒரு நுணா மரமும் ஒன்றைப் பற்றி ஒன்று கவலைப்படுவதில்லை. காரணம் மரங்கள் ஆணிவேர் உள்ளவைகளே, நீங்களும் அப்படித்தான், கவலைப்படாதீர்கள்.

❖❖❖

கடும்பனி என்ற குளிர்காலத்தில் “ஐஸ்க்ரீம்”, “ஃப்ரூட் சாலட்” சாப்பிட முடியுமா? துன்ப காலத்தில் கடவுளை நினைக்க முடியாது. அதனால் மார்கழி மாதத்தில்..சிவபெருமானையும், திருமாலையும் நினைத்து, எப்போதும் கடவுளை எண்ணும் திறனைப் பெறு.

❖❖❖

“அறுவடை”..என்றவுடன் உடனே தலையை நீட்டுகிறது “தை மாதம்”. நானே புத்தியுள்ள மனிதன் என்று நீ எப்பொழுது சமுதாயத்தில் தலையை நீட்டப் போகிறாய்?

❖❖❖

“நினைத்தவுடன் காப்பி”... என்ற திடீர் காபிகளே இன்ஸ்டண்ட் நெஸ் காபி. மார்கழி மாதம் என்றவுடன் சிவனின் மீதும், திருமாலின் மீதும் பக்தி வந்துவிடுகிறது என்கின்றனர் ஆண்டாளும், மாணிக்க வாசகரும். அன்பர்களே உங்களுக்கு?!!..என்கிறார் ஞானிகள்.

❖❖❖

கோபம் யாருக்கு வேண்டுமானாலும் வருகிறது. பக்தி.. இது அனைவருக்கும் வருவதில்லை. சிலருக்கே வருகிறது. இதை மாற்ற வேண்டாமா?

❖❖❖

டில்லி எருமை, ஓங்கோல் பசு, சிந்திக் காளை இவைகள் அனைத்துமே அவைகளுக்குச் சிறப்பு பெயர். இப்பெயரினைப் பெற்று, திட்டு வாங்கும் மனிதன். பெயரளவில் கூட அவைகளின் சிறப்பினைக் கொள்ளாமல் இருக்கிறான். புத்தியுடன சிந்தி... டில்லி பசு, காளை போன்று சுற்றி வரலாம்.

❖❖❖

பக்தி ஒன்றே மனிதனுக்கு ஆதாரம் என்பது.. ஆதாரமான இறைவனை கண்டபின் அறிவிற்குத் தெரிந்து விடுகிறது. இட்லியிருந்து வடை, வடையிலிருந்து இட்லி என்று மகிழ்வுடன் ஈ பறப்பதைப் போன்றதே இது.

❖❖❖

பறக்காத பறவைக்குப் ‘பறவை’ என்ற பெயரே இல்லை. பறக்காத ஒன்றுக்கு புத்தி இல்லை என்றால், மிருகம் என்றே பெயர்.

❖❖❖



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# கற்பூர தீபாரதனை

நம் வீட்டில், கோயில்களில் கற்பூர தீபாராதனையும், நெய்விளக்கு தீபாராதனையும் காட்டப்படுகின்றன. இதற்கு மிகப்பெரிய தத்துவம் உள்ளது.

கற்பூரமும் நெய்விளக்கும் கடைசிவரை எரிந்து போகும். எதுவும் மிஞ்சாது. மனிதன் இறந்த பிறகும் இதே நிலைதான். எஞ்சும் சாம்பல்கூட தண்ணீரில் கரைக்கப்பட்டு விடுகிறது. இந்த தத்துவத்தை உணர்த்தவே கோயில்களில் தீபாராதனை காட்டப்படுகிறது. எனவே இந்த தத்துவத்தின் படி எதுவுமே மிச்சமில்லாமல் நம்மை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்பதே இதன் தத்துவம்.

அதேபோல் கருவறையிலிருக்கும் இறைமூர்த்தம் கல்லினால் வடிக்கப்பட்டது. பலவித அபிஷேகங்கள் செய்வதால் நாளடைவில் சிலாரூபம் அடர்கருமை நிறத்துக்கு மாறிடும். இறைவனின் அழகை முழுமையாய் கண்டு ரசிக்கவே கற்பூர ஒளி காட்டப்படுகிறது.

கற்பூர வெளிச்சத்தில் இறைவனின் அழகு தெள்ளத்தெளிவாய் தெரியும். அதேபோல், கற்பூரம் எரிந்துமுடிந்தவுடன் காற்றில் கலந்து மறைந்து விடுகிறது. அதுபோல ஒளியாகிய ஞானாக்கினியில் நமது அறியாமை எரிக்கப்பட்டு மறைந்து விடுவதை கற்பூர தரிசனம் நமக்கு உணர்த்துகிறது.

கற்பூர தீபம் இடையில் நிற்காமல் முழுமையாக எரிந்து தானே அடங்கவேண்டும். பிரகாசமாக வலஞ் சுழித்து எரிவது மிகவும் நல்லது.

தீபம் நடுங்கக்கூடாது. ஆராதனை முடியும்வரை எரியக் கூடிய அளவுக்குப் போதிய கற்பூரத் தை ஆரத்தியில் நிரப்புவது மிக முக்கியம்.

தீப ஆராதனையின் போது காற்றால் மோதப்பட்டோ அல்லது ஏதோ ஒரு காரணத்தாலோ தீபம் அணைந்துவிட்டால் உடனே வேறு கற்பூரத்துண்டுகளை வைத்து எரித்து, மீண்டும் தீப ஆராதனை காட்ட வேண்டும். வாயால் ஊதித் தீபத்தை அணைக்கக்கூடாது. கற்பூர தீபத்தை அணைத்துச் சத்யம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் அதை மீறவே கூடாது.

கற்பூர தீப ஆராதனையின் போது இறைவனுக்குச் சூட்டிய மலர் கீழே விழுவதும், பல்லி குரல் கொடுப்பதும், மற்றவர்கள் எதேச்சையாக பேசும் நல்ல சொற்களைக் கேட்பதும், இறைவன் திருமுன் வைத்திருக்கும் எலுமிச்சம்பழம் தனக்குமுன் உருண்டு வருவதும் மங்களமாகும்.

கற்பூர தீபம் எரியத் தொடங்கிய நேரம்முதல் அது குளிரும் நேரம் வரை இறைவனது சிலைக ளில் படங்கள் முதலிய இறைத் தொடர் பான அனைத்துப் பொருள்களிலும் தெய்வ சாநித்யம் உச்சநிலையில் விளங்குகிறது.

அந்தக் குறிப்பிட்ட சில நொடிகளில் மனப்பூர்வமாக இறைவழிபாடு செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

## ஆடி மாதத்தில் ராமாயணத்தை கொண்டாடும் கேரள மக்கள்

தமிழகத்தில் ஆடி மாதம் எவ்வளவு விஷேசமாக கொண்டாடுகிறோமோ அதுபோன்றே, கேரளாவில் மலையாள மாதமான கர்க்கிடக மாதமும் கொண்டாடப்படுகின்றது. மேற்கண்ட இரண்டு மாதமும் ஒரே நேரத்தில் வருவது சிறப்பு. தமிழகத்தில் அம்மனை வழிபடும் ஆடி மாதத்தில், கேரளாவில் கார்க்கிடக மாதத்தில் ராமாயணத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டு கொண்டாடப்படுகிறது.

கேரளாவில் இந்த மாதம் முழுவதும் வீடுகளிலும், கோயில்களிலும் ராமாயண பாராயணம் நடப்பது வழக்கம்.



16ம் நூற்றாண்டில் வாழ்ந்த, துஞ் சத்து எழுத்தச்சன், வால்மீகி ராமாயணத்தை, மலையாள மொழியில் மொழி பெயர்த்து, "ஆத்யாத்ம ராமாயணம்' என பெயரிட்டார்.

எழுத்தச்சன், எழுதிய ராமாயணம், மாதத்தின், 30 நாட்களும், பக்தியுடன் வாசிக்கப்படுகிறது.

ஆடி மாதம் முழுவதும் எல்லா பகுதிகளிலும் ராமாயணம் எதிரொலிக்கும். ராமாயண பாராயணம். ஆன்மிக உரையாடங்கள், சத்சங்கங்கள் என்று மாதம் முழுவதும் ஆன்மிகத்தில் மக்கள் ஊறி திளைப்பார்கள்.

தமிழ்நாட்டில் அம்மனுக்கும், கேரளா வில் ராமனுக்கும் உகந்த மாதமாக ஆடி மாதம் திகழ்கிறது.

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# இராமாயணம் வர்ணாசிரம் தொடர்:

கேள்வி: ராமன் வாழ்ந்து முடித்த பிறகுதான் ராமாயணம் எழுதப்பட்டிருக்க வேண்டும். அது எப்போது எழுதப்பட்டது அதை எழுதிய வால்மீகி என்பவர் யார்?

ராமாயணம் நடந்த காலம் இதுதான் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று இதுவரை எவராலும் உறுதி செய்ய முடியவில்லை. இருந்தாலும் மகாபாரதம் எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்பே ராமாயணம் எழுதப்பட்டு விட்டது. இதற்கு ஆதாரம் வியாச முனிவர் எழுதிய மகாபாரத்தில் வனபருவத்தில் ராமோ பாக்யாஞனாம் என்ற பெயரில் ராமனின் கதை கூறப்பட்டுள்ளது. அதில் வால்மீகியின் சில சுலோகங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இதிலிருந்து மகாபாரதத்திற்கு முந்தியது ராமாயணம் என்பது எந்த விதமான ஐயங்களும் இல்லாது உறுதி செய்யப்பட்டுள்ளது. பலவிதமான சர்ச்சைகளும் வாதப்பிரதிவாதங்களும் ஏற்பட்ட நிலையிலும் மகாபாரதம் கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் ஒருவாறு ஒத்துக் கொள்கிறார்கள். எனவே ராமாயணம் அதற்குச்சில நூற்றாண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறு இருக்காது என நம்புகிறேன்.

ராமாயணத்தை எழுதிய வால்மீகி கிருனு என்ற மகரிஷியின் மகனாவார். இவரின் இயற்பெயர் ரிச்சன் என்பதாகும். காட்டிலே பிறந்து காட்டிலே வளர்ந்ததினால் விலங்குகளை வேட்டையாடும் தொழிலை ரிச்சன் செய்தாலும் வழிப்பறிகூடவே செய்ததாகவும் கூறப்படுகிறது. சில அசம்பாவிதமான சம்பவங்களை தமது வாழ்க்கையில் அனுபவித்த ரிச்சன் மகரிஷிகள் சிலரின் ஆலோசனைப்படி ராமநாம ஜபத்தை மேற்கொண்டதாகவும் அதன் மூலம் அளவிட முடியாத ஞானத்தைப்பெற்று வால்மீகி என்ற பெயரைக்கொண்டதாகவும் ராமாயணத்திலேயே தகவல்கள் உள்ளன.

நாகரீகமற்ற காட்டு வாசியாக முரட்டு ஆசாமியாக இருந்தாலும் உள்ளுணர்வு விழித்தெழுந்தால் எவனும் தனது சூழல்களை பொடிப்பொடியாக்கி பெரும் அறிஞனாக, ஞானியாக மாறிவிடுவான் என்பதற்கு வால்மீகியே தக்க சான்றாகும். எந்த குருகுலவாசத்திலும் மொழியை, இலக்கணத்தை இலக்கியத்தைக் கற்றிராத வால்மீகி இன்றைய நிலையிலும் வியப்போடு ரசிக்கும் வண்ணம் அழகான கவிதைகளில் ராமாயணத்தை எழுதியுள்ளார். அந்த கவிதைகளுக்கு இணையான கவிதைகள் இன்று வரை தோன்றவில்லை என்றே சொல்லலாம்.

ராமாயணத்தில் ஏழு காண்டங்கள் உள்ளன. இதில் 500 சருக்கங்களும், 24000 சுலோகங்களும் உள்ளதாக வால்மீகியே கூறுகிறார். ஆனால் 647 சருக்கங்களும் 24250 சுலோகங்களும் ராமாயணத்தில் இன்று இருக்கின்றது இதை வைத்துப்பார்க்கும் பொழுது வால்மீகி ராமாயணத்தில் ஏராளமான இடைச்செருகல்கள் நடந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. ராமனின் வாழ்க்கையை மட்டும் ராமாயணம் கூறவில்லை. விஸ்வாமித்திரர் வரலாறு, பகிரதன் தவம், சுயப்பிரபையின் கதை என்று பல கிளைக் கதைகள் அதில் அடங்கியுள்ளன.




தொல்பழங்காலத்தில் உருவான பலவித காவியங்களில் கதைகளுக்கு மட்டுமே முக்கியத் தும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் ராமாயணத்தில் காவிய வடிவத்துடன் அழகிய உவமைகள், உருவகங்கள் தத்துவ சிந்தனைகள் ஆகிய அனைத்தும் மிக நேர்த்தியாக சொல்லப்பட்டுள்ளது. இதனாலேயே ராமாயணத்திற்கு ஆதிகாவியம் என்ற சிறப்பிடம் தரப்படுகிறது. வால்மீகியும் ஆதிகவி என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். ராமாயணத்திற்கு இந்த பெயர் மட்டுமல்லாது ராவணன் வதம், சீதையின் பெருங்கதை என்ற பெயர்களையும் வால்மீகி தருகிறார். இதன் மூலம் சில உண்மைகளை நாம் புரிந்து கொள்ளுமாறு அவர் செய்கிறார் ராமாவதாரத்தின் முக்கிய நோக்கம் ராவணனை வதைப்பது என்பதாகும். நல்லவர்களுக்கும் தர்மங்களுக்கும் ஊறுவிளைவிப்பவன் எவனாக இருந்தாலும் அவனிடம் எத்தனைச்சிறப்புகள் இருந்தாலும் அவன் அழிந்தே தீரவேண்டும் என்பதாகவும், பெண்ணின் கற்பின் சிறப்பு அவளின் சோதனைகளைத்தாங்கிக்கொண்டு போரிடும் தன்மையிலேயே இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும் என்பதாகவும் மேற்கண்ட பெயர்களை அவர் இக்காவியத்திற்கு சூட்டி இருக்கலாம்.







யோகி ஸ்ரீ ராமானந்த குரு

அதே நேரம் ராமாயணத்தின் மூலமாக அக்கால சமூக அமைப்பையும் மக்களின் அறிவாற்றல் எப்படி இருந்தது என்பதையும் நாம் அறிய முடிகிறது. அவற்றை இன்றைய நிலையில் புரிந்து கொண்டு செயல்படுவது பல நல்ல விளைவுகளை சமூகத்தில் ஏற்படுத்தும் என்பதினால் முக்கியமானவைகளாக அவைகளைக்குறிப்பிட விரும்புகிறேன்.

அக்கால சமூக அமைப்பில் வேதங்கள் குறிப் பிடும் வருணாஸரம தர்மங்கள் மிக முக்கிய மாக கடைபிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் வருணங்கள் என்பது அதாவது ஜாதி அமைப்பு என்பது இன்று நாம் கடைபிடிக்கும் பிறப்பை அடிப் படையாகக் கொண்டு அன்று இல்லை. தனி மனித னின் சிந்தனையையும், குண அம்சத்தையும், தொழில் நிலையையும் அடிப்படையாக கொண்டே அன்றைய வருணாஸரம தர்மங்கள் நடைமுறையில் இருந்தன.

கேள்வி: பிறப்பால் வருவது வருணம் அல்ல குணத்தால் வருவதுதான் வர்ணம் என்ற உங்கள் கருத்தும் இதற்கு முன் பல இருந்த விபரங்கள் முழுமையாகத்தெரியவில்லை. அதைத் தெளிவு படுத்தினால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன்

வருண தர்மம் என்பது இன்றைய நவீன சிந்தனைவாதிகள் கூறுவதைப்போல் ஒதுக்கப்பட வேண்டிய விஷயம் அல்ல. அதை ஒதுக்கி விடவும் யாராலும் எந்தக் காலத்திலும் முடியாது. காரணம் வருணதர்மம் என்பது இயற்கையையும் மனிதனது உளப்பாங்கையும் சார்ந்த விஷயமாகும். வேதங்களில் கூறப் பட்டுள்ள மனோதத்துவப்படி மனித மனங்கள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை,

1. சத்வம் (செயல்களை அதாவது கர்மாக்களை அடக்கி ஆளும் நிலை, தூய்மை, நன்மை, ஞானம் ஆகியவற்றின் ஒட்டு மொத்த உருவம்)

2. ரஜஸ் (செயல் துடிப்பு மிக்க நிலை,சிந்தனையில் விவேகமும் செயலில் வேகமும் உள்ள மனப்பாங்கு)

3.தமஸ் (சிந்தனைத் திறனற்ற துரித இயக் கத்தை விரும்பாத பலஹீனமான மனநிலை)

இந்த மூன்று மனநிலைகளிலேயே உலகிலுள்ள அனைத்துவிதமான மனித மனங்களின் இயல்புகள் அடங்கிவிடுவதாக வேதம் கருதுகிறது. இது உண்மையும் கூட இவற்றின் கலவைகளாகவே இன்றைய மனிதர்களின் இயல்புகள் இருப்பதை நாம் நன்கு அறியலாம்.

ரிக் வேதத்தில் 10 முதல் 90 பகுதிகள் வரை வருகின்ற புருஷ சூக்தத்தில் வர்ணம் என்ற சொல் மனிதனின் சமூக செயல்பாடுகளைக்குறிக்கும் விதத்திலும் குண இயல்புகளை அடிக்கோடிட்டு காட்டும் விதத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

முதல் முறையாக பிராமணன், வைசீகன், சத்திரியன், சூத்திரன் ஆகிய சொற்கள் புருஷ சூக்தத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. புருஷ சூக்தம் புருஷன் அதாவது ஆத்மா என்பதைப் பற்றி விரிவாக பேசும் பகுதியாகும். இதில் பரமாத்வாவின் வாயாக பிராமணனும், புஜங்களாக சத்திரியனும், தொடைகளாக வைசீகனும், பாதங்களாக சூத்திரனும் இருப்பதை குறியீடுகளாக காட்டப்பட்டுள்ளது.

- வாயிலிருந்து பேச்சு வரும் அதனால்தான் அது கல்விக்கான குறியீடு ஆகிறது.
- புஜங்கள் என்பது வலிமையை காட்டுகிறது அதனால் அது ஆளுமைக்கான குறியீடு ஆகும்.
- தொடை என்பது உருவாக்குதல் என்ற குறியீடு ஆகும்.

❖ பாதம் தொழிற்படுதல் என்ற குறியீடு ஆகும்.

எனவே வருணதர்மம் என்பது தனிமனிதனின் சிந்தனையின் பொருட்டே உருவானது ஆகும்.

கற்றவன், கற்றவழி நிற்பவன், கற்றவற்றை கல்லாதவர்களுக்கு போதிப்பவன் எவனாக இருந்தாலும் அவன் பிராமணனே ஆவான்.

ஆளநினைப்பவன், அதற்காக செயல்படுபவன் பிறர் பொருட்டு துன்பங்களை ஏற்கத் துணிபவன் எவனோ அவனே சத்திரியன்.

பொருட்களை உற்பத்தி செய்பவன், பொருள் ஈட்டுபவன், பொருள் தேவையைப்பூர்த்தி செய்பவன், பொருளாதாரத்தை மேம்படுத்த உடலாலும் மனதாலும் உழைப்பவன் எவனாக இருப்பினும் அவன் வைசீகன்.

சிந்தனைக்கு முதலிடம் கொடுக்காமல் செயலை மட்டுமே மூலதனமாகக் கொள்பவன் தனது உடல் உழைப்பில் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள பாடுபடுபவன் எவனாக இருந்தாலும் அவன் சூத்திரன்.

இன்றைய ஜாதி நடைமுறையோடு இந்த வருணக் கொள்கையைக் கலந்து சிந்தித்துப் பார்ப்போம். படித்தவன் பிராமணன் என்று சொல லிக் கொள்பவனுக்கு கல்லாதவன் மூளை உழைப்பு இல்லாதவன் மகனாக இருந்தால் அவன் நிச்சயமாக பிராமணனாக கொள்ளத் தக்கவன் ஆகமாட்டான்.

அதே போன்றே உடல் உழைப்பை மூலதனமாகக் கொண்ட சூத்திரனுக்கு கல்வி கேள்விகளில் தேர்ச்சி மிக்க பிள்ளை இருந்தால் அவனைப் பிராமணனாக ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

**ஆகவே வருணம் என்பது ஜாதி என்பது பிறப்பின் அடிப்படையில் வருகிறது என்று வேதத்தில் எந்த இடத்திலேயும் கூறப்படவில்லை.**

இதை வேதம் காட்டும் சத்வ, ரஜஸ், தமஸ் என்ற மனோதத்துவ அடிப்படையில் பார்ப்போம்.

❖ சத்வகுணம் மேலோங்கி நிற்பவன் அதாவது ஞானம், நன்மை, தூய்மை ஆகிய மனோபாவம் உடையவன் பிராமணன் ஆவான்.

❖ வேகமும், செயல் துடிப்பும் உடைய மனோபாவம் கொண்டவன் சத்ரியன் ஆவான்.

❖ செயல்துடிப்புள்ள ரஜஸமும் மூளைச் செயல்பாட்டை ஆளுமைக் குணத்திலிருந்து சற்று மாற்றிய தமஸமும் உடைய மனோபாவம் உடையவர்கள் வைசிகன் ஆவான்.

❖ தமஸகுணம் மட்டுமே உடையவன் சூத்திரன் ஆவான்.

இந்த குணங்களும் தலைமுறைத் தலைமுறையாக தொடர்ச்சியாக மரபுவழியில் வருவது அல்ல. ஒவ்வொரு சிருஷ்டியும் ஒவ்வொரு இயல்பைக் கொண்டது என்பதினால் குணவழி, ஜாதிக் கொள்கை பிறப்பை அடிப்படையாகக் கொண்டது அல்ல..

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434







ஆச்சரியமான
உண்மை....
சந்தா இல்லை
நன்கொடை பெறுவதில்லை
விளம்பரங்கம் வாங்குவதில்லை
ஆனாலும் வெற்றிகரமாக
100வது இதழை நோக்கி
உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன்,
தரத்திலும், வடிவமைப்பிலும் நம்பர் 1 ஆன்மிக
இ–புத்தகமாக வெளிவரும் ஒரே இதழ்
ஆன்மிகமலர்.காம் இணையதளம் மூலம் வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில்புத்தகம் மட்டுமே....
❖தனித்திருப்போம் ❖உலகை காப்போம் ❖கரோனாவை அழிப்போம்...

# கோகுலாஷ்டமி



பூர்ணாவதாரமான பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஸ்ராவண மாத கிருஷ்ண பக்ஷ அஷ்டமி திதியில் பூமியில் அவதரித்தான். அவன் குழந்தைபிராயத்திலிருந்தே தன்னுடைய அசாதாரண காரியங்களால் பக்தர்களின் சங்கடங்களைப் போக்கினான். இக்கட்டுரையில் கோகுலாஷ்டமி சம்பந்தமான விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம்!

## கோகுலாஷ்டமி

திதி : ஸ்ராவண மாத கிருஷ்ண பக்ஷ அஷ்டமி

## இதிஹாசம்

பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் பிறப்பு ஸ்ராவண மாத அஷ்டமியில் நடு இரவில் ரோஹிணி நக்ஷத்திரத்தில் சந்திர வ்ருஷப ராசியின்போது ஏற்பட்டது.

## மகத்துவம்

ஜன்மாஷ்டமி அன்றுஸ்ரீகிருஷ்ணதத்துவம் மற்ற நாட்களைக்காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகசெயல் பாட்டில் உள்ளது. இந்த திதியில் ‘ஓம் நமோபகவதே வாஸுதேவாய’ என்ற நாமஜபத்தையும் ஸ்ரீகிருஷ்ணனின் மற்ற உபாசனை வழிகளையும் ஆன்மீக உணர்வுபூர்வமாக செய்தால் ஸ்ரீகிருஷ்ண தத்துவத்தின் அதிகபட்ச பயன் கிடைப்பதற்கு உதவும்.

உற்சவத்தை கொண்டாடும் முறை

இன்றைய தினம் நாள் முழுவதும் உபவாசம்இருந்து இரவு 12 மணிக்கு பாலகிருஷ்ணனின் பிறப்பை கொண்டாடுகின்றனர். அதன் பிறகு பிரசாதம் உட்கொண்டு உபவாசத்தை நிறைவு செய்கின்றனர் அல்லது மறுநாள் விடியற்காலை தஹிகாலா பிரசாதத்தை உட்கொண்டு உபவாசத்தை நிறைவு செய்கின்றனர்.

## தஹிகாலா

பல்வேறு உணவுப் பொருட்கள், தயிர், பால், வெண்ணெய் ஆகியவற்றின் கலவையே ‘காலா’ என்பது. ஸ்ரீகிருஷ்ணன் வ்ரஜபூமியில் பசுக்களை மேய்க்கும்போது தன்னுடைய மற்றும் சகாக்களின் உணவை ஒருங்கே கலந்து உணவுக் கலவையாக்கி அனைவருடனும் பகிர்ந்து உண்பான். இக்கதையை அனுசரித்து பின்பு கோகுலாஷ்டமிக்கு மறுதினம் உணவுக்கலவை செய்யும் வழக்கமும் உறியடி உற்சவமும் ஏற்பட்டுள்ளது.

தஹிகாலா சம்பந்தமாக நடக்கும் தவறான செயல்களை தடுப்பீர்!

இன்று தஹிகாலா நிமித்தமாக ஆபாச, கர்ணகடூர நடனம், பெண்களை கிண்டலடித்தல் போன்ற தவறான செயல்கள் நடக்கின்றன. இத்தகைய தவறான செயல்களால் உற்சவத்தின் தூய்மை நஷ்டமடைந்து உற்சவத்தின் மூலம் கிடைக்க வேண்டிய தெய்வ தத்துவத்தின் பலனும் கிடைக்காமல் போகிறது. மாறாக தர்மத்திற்கு தீங்கு ஏற்படுகிறது. இது போன்ற தவறான நடவடிக்கைகளை தடுப்பதற்கு முயற்சி எடுப்பதால் உற்சவத்தின் தூய்மை பாதுகாக்கப்பட்டு எல்லோருக்கும் நல்ல பலன் கிடைக்கும். இதை செய்வதே ஸமஷ்டி நிலையில் செய்யப்படும் பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் உபாசனையாகும்.

ஹிந்துக்களே, தர்மத்திற்கு ஏற்படும் தீங்கை தடுத்து ஸ்ரீகிருஷ்ணனின் அருளிற்கு பாத்திரமாகுங்கள்!

தஸ்மாத் உத்திஷ்ட கௌந்தேய யுத்தாய
க்ருதநிஷ்சய:|

(ஹே, அர்ஜுனா, எழு, யுத்தத்திற்கு தயாராகு!)



ஸ்ரீகிருஷ்ணனின் மேற்கூறப்பட்ட ஆணைப் படி அர்ஜுனன் தர்மத் தைக் காத்து ஸ்ரீகிருஷ்ணனுக்கு பிரியமானவன் ஆனான்! ஹிந்துக்களே, தெய்வங்களின் நிந்தனை, மதமாற்றம், ‘லவ் ஜிஹாத்’, கோவில் திருட்டு,பசுவதை, சிலைகளை சேதப்படுத்துதல் போன்ற தர்மத்தின் மீது நடக்கும் தாக்குதல்களை எதிர்த்து உங்களின் சக்திக்கேற்ப சட்டத்திற்கு உட்பட்ட முறையில் போராடுங்கள்!

பாலகிருஷ்ணன் கோபியரின் தலை மீதிருந்த பானையை உடைத்தல், தயிர்பானை உடைக்கும் உற்சவம், நவராத்திரியில் நடக்கும் ‘கடஸ்தாபனம்’ ஆகியவற்றைப் பற்றி ஸத்குரு (டாக்டர்) சாருதத்த பிங்களே கூறியுள்ள உள்ளர்த்தங்கள், அத்துடன் இன்றைய காலத்தில் ‘பராத்பர குரு டாக்டர் ஆடவலே யோகேச்வரனான ஸ்ரீகிருஷ்ணனைப் போன்று எவ்வாறு காரியங்களை செய்கிறார்?’ ஆகியவற்றைப் பற்றி கொடுத்த விளக்கங்களை இங்கே தந்துள்ளோம்.

பாலகிருஷ்ணன் கோபியரின் தலை மீதுள்ள பானைகளை உடைத்த லீலையின் உள்ளர்த்தம் பாலகிருஷ்ணன் கோபியரின் தலை மீதுள்ள பானைகளை உடைத்ததன் மூலம் அவர்களை சுற்றியிருந்த ஆவரணத்தைக் களைந்து பரமாத்மாவை நோக்கி செல்வதற்கு வழி வகுத்தான்!

‘கிருஷ்ணனின் தோழியரான கோபியர்கள் பால், தயிர், வெண்ணெய் ஆகியவற்றை பானைகளில் நிரப்பி தலை மீது வைத்துக் கொண்டு செல்லும்போது பாலகிருஷ்ணன் கோபியரின் பானைகளை உடைத்தான். இதன் உள்ளர்த்தம் பின்வருமாறு.

அ. கோபியரின் ஆன்மீக முன்னேற்றம் அவர்களின் ஆக்ஞா சக்கரம் வரை நடந்திருந்தது; ஆனால் அவர்களின் குண்டலினி சக்தி ஸஹஸ்ரார சக்கரத்தில் மாட்டிக் கொண்டிருந்தது. பாலகிருஷ்ணன் கோபியரின் பானைகளை உடைத்தான் அதாவது அவர்களின் ஆத்மாவை சுற்றியிருந்த முக்கியமாக ஸஹஸ்ரார சக்கரத்தை சுற்றியிருந்த ஆவரணத்தை சிறிது சிறிதாக பிளந்தான்.

ஆ.யோகேச்வரனான ஸ்ரீகிருஷ்ணன் கோபியரை சுற்றியுள்ள ஆவரணத்தைக் களைந்து அவர்களின் ஆத்மா பரமாத்மாவில் லயிக்கும்படியான யோகத்தைத் தந்தருளினான். அதனால்தான் பானைகள் உடைந்தாலும் கோபியருக்கு கிருஷ்ணன் மீது கோவம் ஏற்படவில்லை; மாறாக ஆனந்தமே உண்டானது. இதன் காரணம் வெளியில் பானைகள் உடைந்தது போல் தெரிகிறது, ஆனால் உண்மையில் ஆத்மாவை சுற்றியிருந்த ஆவரணம் குறைந்து மற்றும் களையப்பட்டதால் அவர்களுக்கு ஆனந்த அனுபவமே உண்டானது.

‘பாலகிருஷ்ணன் பானைகளை உடைத்தான்’ என்பதன் உண்மையான லீலாவிநோதம் இதுதான்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

# சிவாஜியின் அடக்கம்

சத்திரபதி சிவாஜி தன் குரு ராமதாசருக்கு ஒருசமயம் நிறைய பொன்னும் மணியும் காணிக்கையாக அனுப்பி வைத்தார். அவற்றைப் பெற்றுக்கொண்ட ராமதாசர் பதிலுக்கு சிறிது மண், கொஞ்சம் கூழாங்கல், சிறிதளவு குதிரைச்சாணம் ஆகியவற்றைக் கொடுத்து அனுப்பினார். இதனைக் கண்ட சிவாஜியின் தாயாருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஒரு ராஜகுமாரனுக்குப் பரிசளிக்கும் பொருள்களா இவை'' என்று கேட்டு வெகுண்டார். அதற்கு மாவீரர் சிவாஜி அடக்கத்துடன் சொன்னார். "அம்மா, இவையாவும் குருநாதரின் தீர்க்க தரிசனம் மிக்க பொருள்கள். இந்த மண், அன்னிய நாடு முழுவதையும் நான் ஜெயிப்பேன் என்பதைக் குறிக்கிறது. இந்தக் கற்கள் என்னுடைய நாட்டை வலிமை மிகுந்த கோட்டையால் காப்பேன் என்பதைக் குறிக்கிறது. இந்தக் குதிரை சாணம் எண்ணற்ற மாவீரர்கள் அடங்கிய ஒரு குதிரைப் படையை உடனடியாக அமைக்க வேண்டும்" என்பதைக் குறிக்கிறது.

### ஞானிகளைப் பற்றி ஞானியரே அறிவர்

ஸமர்த்த ராமதாசரைச் சந்தித்த பிறகு, அந்த ப்ரமிப்பிலிருந்து சிவாஜியால் விடுபடவே இயலவில்லை.

அவரது அழகான திரவுருவம், அவர் பேசிய வார்த்தைகள், அவரது மகிமை இவற்றைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

சிறிது காலம் சென்றதும் வேறெங்கோ சென்றுவிட்டுப் படையோடு திரும்பிக் கொண்டிருந்த சிவாஜியின் கண்களில் தேஹு என்ற ஊரின் பெயர் தென்பட்டது. சட்டென்று நின்றார் சிவாஜி. அன்றைக்கு குருநாதர் இந்த தேஹு கிராமத்தில் சென்று துகாராம் என்ற மஹாத்மாவைப் பார் என்றாரே.

படைகள் முழுவதையும் ஊருக்கு வெளியே நிறுத்திவிட்டு, இரண்டு மந்திரிகளுடன் ஊருக்குள் சென்றார் சிவாஜி.

துகாராம் மஹராஜின் வீட்டைக் கண்டுபிடிப்பது வெகு சுலபமாய் இருந்தது. மந்திரிகளை தூரத்தில் நிறுத்தி விட்டுத் தான் மட்டும் துகாராமைப் பார்க்கச் சென்றார் சிவாஜி.

பழைய வீடு, வீட்டில் எந்த வசதிகளும் இருப்பதற்கான அறிகுறிகள் இல்லை. சின்னஞ் சிறிய குழந்தைகள் கந்தலாடையோடும், ஒட்டிய வயிறோடும் வாசலில் விளையாடிக் கொண் டிருந்தன.

துகாராம் திண்ணையில் அமர்ந்து தம்புராவை மீட்டிக்கொண்டு கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார்.

அவரது இனிமையான குரல் சிவாஜியின் மனத்தை என்னவோ செய்தது. சிறிது தூரத்தில் நின்றுகொண்டு தன்னை மறந்து கீர்த்தனத்தில் லயிக்கலானார்.

சிறிதுநேரம் கழித்து சிவாஜியைக் கவனித்த துகாராம் தலையசைத்து அருகில் அழைத்தார்.

"நீங்க சிவாஜி மஹராஜா தானே?"

"ஆம் ஸ்வாமி...."

"வாங்க, இங்க என் வீட்டு வாசலில் என்ன செய்யறீங்க? ஏதாவது வேணுமா?"

சிவாஜி தான் ஸமர்த்த ராமதாசரைச் சந்தித்த விவரங்களைச் சொல்லி,

"அவர்தான் உம்மைப் பார்த்து வரச் சொன்னார். அவரால் எப்படி அவ்வளவு குறுகிய நேரத்தில் அவ்வளவு பேருக்கும் உணவு படைக்க முடிந்தது? அந்த ரகசியத்தை உம்மிடம் கேட்கச் சொன்னார்" என்று சொன்னார்.

துகாராம் பெரிதாய்ச் சிரித்தார்.

"அதிருக்கட்டும். இப்ப யுத்தம் முடிச்சுட்டுத்தானே வர?"

"ஆமாம் ஸ்வாமி"

"படைகளெல்லாம்?"

"ஊருக்குள்ள படைகள் வந்தா கிராமத்து மக்களுக்குத் தொந்தரவாயிடும்னு கிராமத்து எல்லையில் நிறுத்தியிருக்கேன்."

"சரி, எல்லாரும் சாப்பிட்டுப் போகலாம்." என்றாரே பார்க்க வேண்டும்.

சிவாஜிக்குத் தலை சுற்றியது. காட்டுக்குள் ஒருவர் அதிசயம் செய்தார் என்றால், இவரும் அதையே சொல்கிறாரே.

"ஸ்வாமி, சதுரங்க சைன்யமும் வந்திருக்கு. நான் தம்மைச் சந்திக்கத்தான் வந்தேன்."

"எனக்குத் தெரியும்பா.. ராஜா வந்தா சதுரங்க சைன்யம் வரும்னு தெரியாதா? எல்லாரும் சாப்பிட்டுப் போகலாம்." என்றவர்,

உள்ளே திரும்பி "ஆவளீ.." என்றழைத்தார்.

அவரது மனைவி ஜீஜாபாய் இவர் கண்ணைக் காட்டியதும், ஆட்டா மாவு இருந்த ஒரு சிறிய சம்படத்தைக் கொண்டுவந்து கொடுத்தார்.

"படையெல்லாம் இங்க வந்தா, கிராமத்து ஜனங்களெல்லாம் பயப்படுவாங்க நாம அங்க போவோம்" என்று சொல்லிக்கொண்டே ஊர் எல்லைக்கு வந்தார்.

சிவாஜி பேச்சற்றுப் போய், பின்தொடர்ந்தார்.

எல்லாப் படைவீரர்களையும்,



எஸ்.ரகுராமன்

## சமர்த்த ராமதாசர் வரலாறு (பாகம்-3)







www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

யானை, குதிரகளையும் வரிசையாய் நிற்க வைத்து கையை நீட்டச் சொல்லி, கோவில்களில் விபூதி ப்ரசாதம் கொடுப்பதுபோல், ஒரு சிட்டிகை ஆட்டா மாவு கொடுத்தார். அதை உண்டதும், கண்ணன் உண்ட ஒரு சோற்றுப் பருக்கையால் துர்வாசரின் வயிறு நிறைந்ததுபோல், அத்தனை பேரின் வயிறுகளும் நிரம்பின. படைவீரர்கள் எல்லாரும் வயிறு நிரம்பிடுச்சு.

"இன்னும் பத்து நாளைக்கு உணவே வேணாம் மஹராஜ்" என்றனர்.

உண்மையில் சிவாஜிக்கும் அப்படித்தான் இருந்தது.

காட்டில் இருந்துகொண்டு கணத்தில் பெரிய விருந்தை ஏற்பாடு செய்த அவர் பெரியவரா? அல்லது ஒன்றுமே இல்லாமல் ஒரு சிட்டிகை மாவைக் கொடுத்து வயிறு நிரம்பச் செய்த இவர் பெரியவரா? எது அதிசயம்?

அங்காவது உண்மையில் உண்பதற்கு விருந்து இருந்தது. உண்டதும் வயிறு நிரம்பியது. இங்கு ஒன்றுமே இல்லாமல், ஒரு சிட்டிகை மாவில் வயிறு நிரம்பிவிட்டது. சிவாஜிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. விழுந்து வணங்கிவிட்டு, துகாராமிடம் கேட்டேவிட்டார்.

"ஸ்வாமி, நான் அவர் காட்டில் எப்படி உணவு படைத்தார் என்று தெரிந்துகொள்ள வந்தால், நீங்கள் வெறும் கையால் வயிற்றை நிரப்புகிறீர்கள்? இது எப்படி சாத்தியமாயிற்று. தயவு செய்து சொல்லுங்கள்" என்றார்.

குழந்தைபோல் சிரித்த துகாராம் சொன்னர்.

"அதுவா, காட்டில் ஸமர்த்த ராமதாசர் இருக்காரே? அவர்கிட்ட போய்க் கேளு" என்றார்.

ஞானிகளைப் பற்றி ஞானியரே அறிவர். ஸாமான்யர்களுக்கு அவர்களது நிலை புரிந்து விடுவதில்லை.

## சிவாஜியை மடக்கிய ராமதாசர்

தென்னாட்டில் முஸ்லீம் படை எடுப்பாளர்களை ஒடுக்கியது விஜய நகரப் பேரரசு. அதற்குப் பின்னும் வட நாட்டில் அவுரங்கசீப்பின் அட்டஹாசம் நீடித்துக் கொண்டே இருந்தது.

அப்பொழுது மஹாராஷ்டிரத்தில் மலைப் பகுதிகளில் வாழ்ந்த மக்களை ஒன்று திரட்டி உலகின் முதலாவது 'கொரில்லா' போரை நடத்தியவர் சிவாஜி.

வீர சிவாஜியின் இந்து சாம்ராஜ்ய ஸ்தாபிதம் அவுரங்கசீப்பையும் மொகலாய சாம்ராஜ்யத்தையும் விழுத்தாட்டியது. வீர சிவாஜியின் வெற்றிக்குக் காரணம் பவானி தேவி கொடுத்த வாளும், சமர்த்த ராமதாஸர் கொடுத்த ஆசியும் என்பது கொஞ்சம் கொஞ்சமாக சிவாஜியின் மனதில் இருந்து அகலத் தொடங்கியது.

அஹங்காரமும், மமகாரமும் ('யான்', 'எனது' என்னும் செருக்குகுறள்) பெருகவே, சிவாஜிக்கு சமர்த்த ராமதாசர் ஒரு பாடம் கற்பிக்க நினைத்தார்.

நல்ல தருணமும் வந்தது. ஒரு நாள் மாபெரும் கோட்டை கட்டும் வேலையில் ஆயிரம் தொழிலாளிகள் ஈடுபாடிருந்தனர். சிவாஜி, பெரும் மமதையுடன் அதை மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தார். நான் இல்லாவிடில் இந்த மலை ஜாதி மக்களுக்கு சோறும் தண்ணீரும் கிடைத்து இருக்குமா? என்ற எண்ணம் அவரது மனதில் இழை ஓடியது.

அப்போது அங்கே ராமதாசரும் வந்து சேர்ந்தார்.

"சிவாஜி! ஒரு பெரிய பாறையை உடைக்க வேண்டும். நாலைந்து தொழிலளிகளைக் கூப்பிடு" என்று குரு ராமதாசர் உத்தரவு இட்டார்.

குருவின் இந்த விநோத வேண்டுகோள் வியப்புக் குறியை எழுப்பியது. இருந்த போதிலும் குரு விஷயத்தில் கேள்விக் குறியை எழுப்பி அறியாத மாபெரும் பக்தன் வீர சிவாஜி. உடனே உத்தரவு பறந்தது.

தொழிலாளிகள் வந்தனர், பாறையை வெட்டி உடைத்தனர், என்ன அதிசயம்!! அதற்குள் சிறிய தூவாரங்களில் தண்ணீர். அதில் சில தேரைகள்! எல்லோரும் வியப்புடன் பார்த்தனர்.

"சிவாஜி! இவைகளுக்கும் நீதான் உணவு படைக்கிறாயா?" என்றார் குருதேவர்.

சிவாஜிக்குப் புரிந்தது. அகந்தை அகன்றது. குருதேவரின் காலில் விழுந்தார். கண்ணிர் மல்கினார். குருவின் ஆசி பெருகியது. காவிக் கொடிகள், மேலும் பல மொகலாயர் கோட்டைகளை வென்று, அவைகளின் மீது பட்டொளி வீசிப் பறந்தன!



"ஸஜ்ஜன்காட்" பகுதியில் அமைந்துள்ள சமர்த்த ராமதாஸரின் சமாதித் திருக்கோவில்.

## சிவாஜி காப்பாற்றபடுதல்

ஒரு நாள் சிவாஜி சிறிதளவு படையுடன் சமர்த்த இராமதாசர் தங்கியிருந்த மாவுலி என்ற நகரத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்.

அந்தத் தகவலை அறிந்த முகலாய மன்னன் ஔரங்கசீப் சிவாஜியைச் சிறைப் பிடிக்க ஒரு பெரும் படையை அனுப்பி வைத்தான். இரவு நேரம் நெருங்கியது. பயணம் செய்து கொண்டிருந்த சிவாஜி காட்டிலேயே ஓரிடத்தில் முகாம் போட்டுத் தங்கிவிட்டுக் காலையில் பயணத்தைத் தொடரலாம் எனத் திட்டமிட்டார்.

அதன்படியே காட்டில் ஆங்காங்கு கூடார மிட்டுப் படைவீரர்கள் தங்கினார்கள். சிவாஜி மட்டும் தனிமையை விரும்பிச் சற்றுத் தள்ளியே கூடாரத்தை அமைத்து அதில் தங்கியிருந்தார். சமர்த்த இராமதாசர் கற்றுக் கொடுத்த இராமநாம மந்திரத்தை அப்போது சிவாஜி இனிய இசையுடன் பாடிக் கொண்டிருந்தார். அந்த நேரம் பார்த்து.

ஔரங்கசீப்பின் பெரும் படை சிவாஜியையும் சிவாஜியின் படையையும் சுற்றி வளைத்து முற்றுகையிட்டது. அது எதுவும் தெரியாத சிவாஜி மன்னரோ தன்னை மறந்த நிலையில் பக்திப் பரவசத்தோடு இராம மந்திரத்தைப் பாடிக் கொண்டிருந்தார்.

எந்த நேரமும் சிவாஜியும் அவரது படையும் கைது செய்யப்படலாம் என்ற அந்தச் சூழ்நிலையில், அந்த இரவு நேரத்தில், காட்டிலிருந்த குரங்குக் கூட்டங்கள் சிவாஜி மன்னரின் படைகளுக்கு உதவியாக முகலாயப் பெருஞ்சேனையின் மீது பாய்ந்தன. முகலாயப் படை திகைத்தது.

"இவ்வளவு பெரிய வானரக் கூட்டம் எங்கிருந்து வந்தது?" என்ற அதிர்ச்சியில் முகலாயப் படை சிதறிப் போய் சின்னா பின்னமாகி ஓடியது.

சிவாஜிக்கு விவரம் தெரிந்தது. 'ஆஞ்சனேயரே வந்து தம்மைக் காப்பாற்றியிருக்கிறார்' என உணர்ந்தார். அதனால் விடிந்ததும் விடியாததுமாகப் புறப்பட்ட சிவாஜி நேரே போய் சமர்த்த இராமதாசரைத் தரிசித்து வணங்கி நடந்ததையெல்லாம் அவரிடம் கூறினார்.

சிவாஜி ராம தாசஸரை தன்னுடன் இருந்து நல்வழிப்படுத்த வேண்ட, ராமதாஸர் அரசர் அருகில் இருப்பதைத் தவிர்த்து பக்கத்தில் இருக்கும் ஒரு குன்றில் "ஸஜ்ஜன்காட்" (அருகில் படம் உள்ளது) வசித்து வந்திருக்கிறார். இந்த இடத்தில் தான் ராமதாஸரின் சமாதித் திருக்கோவில் அமைந்திருக்கிறது..

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

# பிராணவாயு அதிகம் கிடைக்கும் ஆடிமாதம்

தமிழ் மாதங்கள் அனைத்தும் ஒவ் வொரு கடவுளுக்கு உகந்த மாதங்களாக வரையறுக் கப்பட்டுள்ளது. இந்த வகையில் அந்த மாதத்திற் குரிய கால சூழ்நிலைக்கேற்ப நமது தெய்வங்களின் தன்மையும் விளங்குமாறு நமது முன்னோர் வகுத்து வைத்து திருவிழாக்கள் போன்றவைகளை கொண்டாடியுள்ளனர்.

இந்தவகையில் பார்க்கும்போது ஆடி மாதம் மிகச் சிறப்பானது. தட்சிணாயன புண்ணிய காலம் ஆடி மாதத்தில் தான் தொடங்குகிறது. இப்புண்ணிய காலத்தின் போது சூட்சும சக்திகள் வானத்திலிருந்து வெளிப்படும். அந்த சமயத்தில் பூஜைகள் வேத பாராயணங்கள், ஜபங்கள், நீத்தார் வழிபாடுகள் செய்தால் பலன் அதிகமாக கிடைக்கும்.

ஆடிக்காற்றில் அம்மியும் நகரும் என்று முன்னோர் கூறியுள்ளனர், அதற்கேற்ப இந்த ஆடி மாதத்தில் பிராண வாயு அதிகமாக கிடைக்கும். இந்த சமயத்தில் ஜீவாதார சக்தி மிகுந்து காணப்படுவதால் தான் விவசாயத்தில் விதை தெளிப்புக்கு ஏற்ற மாதமாக கருதப்பட்டு ஆடிப்பட்டம் தேடி விதை என்ற பழமொழி வந்தது.

நமக்கு ஒரு வருடம் என்பது தேவர் களுக்கு ஒரு நாள் அதன்படி பார்த்தால் ஆடி மாதத்தில் தேவர்களின் மாலை நேரம் தொடங்குகிறது. அதனாலும் பூஜைகள் ஆராதனைகள் மிகுந்திருப்பதாகவும் கொள்ளலாம்.

சூரியன் கடக ராசியில் சஞ்சரிக்கும் கால அளவான 31 நாட்கள், 28 நாழிகை, 12 விநாடி கால அளவை கொண்டது ஆடி மாதம். எனவே இதை கற்கடக மாதம் என்றும் சொல்வதுண்டு. கடக ராசி சந்திரனுக்குரியது. சிவ அம்சமான சூரியன், சக்தி அம்சமான சந்திரனின் ஆட்சி வீட்டில் இருப்பதால் (ஒன்று சேர்வதால்) ஆளுமை பலம் அடைகிறது. அதாவது சக்தியின் பலம் அதிகரிக்கிறது. இந்த மாதத்தில் மட்டும் சிவம் சக்திக்குள் அடக்கமாகி விடுகிறார். எனவே சிவனை விட அம்மனுக்கு ஆடி மாதத்தில் ஆற்றல் அதிகமாக இருக்கும் என்பது ஐதீகம். அதனாலேயே இந்த மாதம் அம்மன் வழிபாட்டுக்குரிய மாதமாக திகழ்கிறது.

ஒரு கல்ப காலத்தில் ஆடி மாதம் ஒன்றில் தான் பார்வதி தேவி. மலை ரசன் மகளாக பிறந்தால் என் கிறது தேவி பாகவதம். மதுரை மீனாட்சி அம்மை அவதரித்தது ஆடி மாதத்தில் தான். ஆடி மாதம் வந்தவுடன் அம்மன் கோயில் கள் குறிப்பாக மாரியம்மன் கோயில்கள் அனைத்தும் புத்துணர்வு பெற்று காணப்படும் கூழ் வார்த்தலும், பூக்குழி இறங்குதலுமாக களை கட்டி விடும். விளக்கு பூஜைகள், கூட்டு வழிபாடுகளுக்கும் ஏற்ற மாதம் இது.

ஆடி மாதம் மழைக்காலத்தின் ஆரம்பம். தொற்று நோய்கள் பல இந்த கால கட்டத்தில் பரவும். வேம்பும், எலுமிச்சையும் இயற்கையாகவே சிறந்த கிருமி நாசினி. இதன் காரணமாகத்தான் இந்த மாதத்தில் வேம்பும், எலுமிச்சையும் கொண்டு வழிபாடு செய்யப்படுகிறது.



பலர் கூடும் கோயில் திருவிழாக்களில் அம்மனுக்கு படைக்கப்பட்டு பிரசாதகமாக இவை தரப்படுவதால் நோய்கள் பரவாமல் தடுக்கப்படுகிறது. வெப்பம் குறைவான இந்த நாட்களில் எளிதில் செரிக்க கூடிய உணவான கூழ் படைக்கப்பட்டு, பிரசாதமாக அளிக்கப்படுகிறது. அதனால் தான் ஆடிக்கூழ் அமிர்தமாகும் என்று சொல்லப்படுகிறது. ஆடிமாதத்தில் வரும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளோடு, ஆடிப்பதினெட்டு, ஆடிப்பூரம் ஆடிப்பௌர்ணமி என பல சிறப்பு வழிபாட்டு தினங்கள் உள்ளன.

ஆடிசெவ்வாய்: ஆடிச் செவ்வாய் தேடிக் குளி, அரைத்த மஞ்சளை பூசிக்குளி என்பது பழஞ்சொல். இதிலிருந்தே ஆடிச் செவ்வாயன்று என்ணெய் தேர்த்து நீராடுதலில் முக்கியத்துவம் விளங்கும் அவ்வாறு செய்தால் வீட்டில் மங்கலம் தங்கும் என்பது மரபு, தமிழத்தின் தென் பகுதிகளில் ஆடிச்செவ்வாய் அன்று அவ்வை நோன்பு கடைப்பிடிக்கும் வழக்கம் இன்றும் இருக்கிறது.

பெண்களுக்கு சவுகரியமான ஒரு ஆடிச்செவ்வாயில் ஒரு வீட்டில் விரதம் இருக்கும் பெண்கள் கூடுவார்கள். அன்று முழுவதும் கைக்குழந்தைகள் தவிர வேறு எந்த ஆணுக்கும் அந்த வீட்டில் இடம் கிடையாது. இரவு பத்து மணியளவில் பூஜை துவங்கும். வயதில் முதிர்ந்த பெண்மணி அவ்வையின் கதையையும் அம்மனின் கதையையும் மற்றவர்களுக்கு கூறுவார். பின்னர் பூஜை நடக்கும் அன்று உப்பில்லாமல் அரிசிமாவில் செய்யப்படும் கொழுக்கட்டைகளே பிரசாதம், இந்த பிரசாதத்திற்கு பெயர் பூனை பிரசாதம்.

விரதமிருக்கும் பெண்கள் மட்டுமே அதை உண்ணலாம். மறு நாள் காலையில் தான் ஆண்கள் வீட்டுக்குள் வரலாம். இந்த பூனை பிரசாதங்களை ஆண்கள் கண்டிப்பாக பார்க்க கூடாது என்பது எழுதாத சட்டமாக இருந்து வருகிறது.

இந்த பூஜையை கடைப்பிடித்தால் தீர்க்க சுமங்கலித்துவம், நீங்காத செல்வம், இணக்கமான கணவன், நல்ல குழந்தைகள் வாய்க்கும் என்பர்,. மணமாகாத கன்னியர்க்கும் குழந்தையில்லா தம்பதிகளுக்கும் இந்த பூஜை ஒரு வரப்பிரசாதம்.

## ஆடிப் பெருக்கு

ஆடி மாதத்தின் பதினெட்டாம் நாளில் கொண்டாடப்படுவது ஆடிப்பெருக்கு. நமது நீராதாரங்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக ஆடிப்பெருக்கு கொண்டாடப்படுகிறது. விவசாயிகளுக்கு ஜீவாதாரமாக விளங்கும் காவிரித் தாய்க்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படும், இத்திருநாளில் மக்கள் தங்கள் குடும்பங்களுடன் சென்று காவிரி நதிக்கு பூஜை செய்து, சிறப்பு வழிபாடு நடத்துவர். இந்நாளில் திருமணம் ஆகாதவர்கள், தங்களுக்கு திருமணம் ஆகவும், திருமணமான பெண்கள் தாலி பாக்கியம் நிலைக்கவும், குடும்பம் செழிக்கவும் வழிபாடு நடத்துவர். பெண்கள் புதிய மஞ்சள் பூசிய கயிற்றை கட்டிக்கொள்வர்.

காவிரி ஆற்றின் படிக்கட்டுகளில் பச்சை வாழை இல்லை இட்டு அதில் காப்பரிசி, கருகமணி, வாழைப்பழம், புதிய மஞ்சள் கயிறு, காதோலை ஆகியவற்றை வைத்து தீபம் ஏற்றி வழிபாடு நடத்தப்படும்.

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

The ‘bhoomi pujan’ ceremony will start from August 3 but the foundation for the temple will be laid on August 5 by Prime Minister Narendra Modi.

# அயோத்தி ராமர் கோவில்



## சிறப்பாக அமைய

## ஆன்மிகமலர்.காம்

## வாசகர்கள் மற்றும் குடும்பத்தார் சார்பில் பிரார்த்திக்கிறோம்



ஆன்மிகமலர்

GET IT ON Google Play